# கேகாலை, இரத்தினபுரியில் பெரு வெள்ளம்: 300 பேர் பலி!


விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | வைகாசி 23 | ஷவ்வால் 30 | இதழ் 18

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 05-06-1989



University of Jaffna Sri Lanka ... Periodicals ... Library


## ஒரு லட்சம் பேர் பாதிப்பு
## 47-ம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட மோசமான வெள்ளம்!

(கொழும்பு)

கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கினால் 300 பொதுமக்கள் வரையில் இறந்துள்ளதாகவும், சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்த மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக இந்தத் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

20 முதல் 25அடி வரையிலும் இரு மாவட்டங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வெள்ளப்பெருக்கினால் 45ஆயிரம் பொதுமக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளதுடன், ஆயிரத்திற்குமதிகமானோர் தமது வீடுகளை இழந்துள்ளனர்.

24மணிநேரம்வரை தொடர்ச்சியாக மழை பெய்தமையால்


(8-ம் பக்கம் பார்க்க)


## 'ஈழநாடு'க்கு சிறப்புப் பேட்டி
## ஆசிரியர் இடமாற்றம் தமிழ் மாவட்டங்களுக்கு
# 500 பட்டதாரி ஆசிரியர்

### யாழ் மாவட்டத்துக்கு மட்டும் 260

(துவான் நஸீர்)

கல்விச்சேவைகள் ஆணைக்குழுவினால் 1984 ம் ஆண்டில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் ஒருவாரத்துக்குள் அறிவிக்கப்படவுள்ளது. இவர்களில் 260 பட்டதாரி ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்துக்கும் 240 பட்டதாரி ஆசிரியர்கள் ஏனைய தமிழ் மாவட்டங்களுக்கும் இடமாற்றம் செய்யப்படுவார்கள். என்று கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர்


(8ம் பக்கம் பார்க்க)


## சீன நிலைமை

(பீக்கிங்)

சீனாவில் மாணவர் போராட்டத்தை கட்டுப்படுத்த இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதால் அங்கு பெரும் இரத்தக்


(8-ம் பக்கம் பார்க்க)


## ஜனாதிபதி பிரேமாவை இந்தியத் தூதுவர் சந்தித்தார்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. மல்ஹோத்திரா, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பின்போது இந்திய-இலங்கை உடன்பாட்டை முழுமையாகச் செயல்படுத்த கடமைப்பட்டிருக்கும்இந்தியா அமைதிப்படை திரும்புவதற்கான காலக்கெடு நிர்ணயிக்


(8-ம் பக்கம் பார்க்க)


## இந்திய அமைச்சர்களை திலகரத்ன சந்திப்பார்

(கொழும்பு)

லங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவின் விசேட செய்தியொன்றை கொண்டு சென்றுள்ள இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. பெர்னாட் திலகரத்தின இந்திய வெளியுறவு அமைச்சரையும், அமைச்சு அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது.

## இளைஞன் சுட்டுக் கொலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகேசு குகதாஸ் (21) எனும் இளைஞன் இனந்தெரியாதவர்களால் நேற்று முன்தினமிரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலம், துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் புங்குடுதீவு பெருங்காட்டுச் சந்தியில் கிடக்கக் காணப்பட்டது.

## நயினை அம்மன் கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்பாள் வருடாந்த உற்சவம் இன்று 5ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

18ம் திகதி தேர்உற்சவமும், 19ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

ஆலயத்திற்குவரும்அடியார்களை அடையாள அட்டையுடன் வருகை தரவேண்டுமென்று மேற்படி ஆலயஅறங்காவல் சபையினர் கேட்டுள்ளனர்.

## அமைதிப்படை வெளியேற்றம்: சிறிமாவோ கருத்து

(கொழும்பு)

இந்திய அமைதிப்படை வாபஸ் பெறவேண்டும என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா விடுத்துள்ள கோரிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வரவேற்றிருக்கிறது.

கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நாட்டில் அமைதிப்படை நிலைகொண்டுள்ளதற்கான பொறுப்பை ஐக்கிய தேசியக்கட்சியே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அமைதிப்படையினர் வாபஸ் பெற்றபிறகு அதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்படும் வெற்றிடத்தை இலங்கைப்படைகள் மூலம் நிரப்புவ


(8-ம் பக்கம் பார்க்க)


## சிங்கள இளைஞர்களால் நிறையும் 'பூஸா' முகாம்

(கொழும்பு)

தென் பகுதியில் காலி மாவட்டத்திலுள்ள 'பூஸா' தடுப்பு முகாம் தற்போது சிங்கள இளைஞர்களால் நிரப்பப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இப் பகுதிகளில் பொலிஸார், இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் தேடுதலின் போது கைதாகும் சிங்கள இளைஞர்கள் இங்கு தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள


(8-ம் பக்கம் பார்க்க)


### தலைமன்னார்-இராமேஸ்வரம் கப்பல் சேவை
## வாரத்தில் 2 நாட்கள் நடைபெறும்

(மன்னார்)

தலைமன்னார் - இராமேஸ்வரன் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதலில் வாரத்தில்இரண்டு நாட்கள் மட்டுமே இக்கப்பல் சேவையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளாகத் தெரிகிறது.

இக்கப்பல்சேவையை நடத்துவதற்கான பூர்வாங்கவேலைகள் நடைபெறுகின்றன.

இதற்காக கொழும்பு - தலைமன்னார் இரவு புகையிரத சேவையை, நடாத்தவும் புகையிரதப்பகுதி நடவடிக்கை எடுத்துவருகிறது.

# கொமெய்னி காலமானார்

(தெஹ்ரான்)

ஈரானின் ஆன்மீகத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி தமது 89வது வயதில் நேற்றுக் காலமானார். இத்தகவலை தெஹ்ரான் வானொலி நேற்று அறிவித்தது.

ஈரானில் இவரது மறைவையொட்டி ஐந்துநாள் பொது விடுமுறையும், நாற்பதுநாள் தேசிய துக்கதினமும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

வாரிசு எவரையும் தெரிவு செய்யாமலே இவர் மறைந்துள்ளார்.


(8-ம் பக்கம் பார்க்க)


## தெற்கில் ஹர்த்தால், வேலைநிறுத்தம்! 14-ம் திகதி முதல் ஜே. வி. பி. திட்டம்!

(கொழும்பு)

தென்பகுதியில் இம்மாதம் 14ந் திகதி முதல் ஹர்த்தால் மற்றும் வேலைநிறுத்தங்களை நடத்த ஜே. வி. பி.யினர் திட்டமிட்டுவருவதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப் பொருட்களை மேற்படி திகதியிலிருந்து பகிஷ்கரிக்குமாறு அண்மையில் ஜே. வி. பி.யினர் அறிக்கை வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

இதை அமுல்படுத்தும் வகையிலேயே மேற்படி [illegible] வேலைநிறுத்த [illegible]களில் ஜே. வி. பி.யினர் ஈடுபடலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடிக்க முப்படையினரும் உஷார்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாது[illegible] வித்துள்ளன


(8-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

Deepak PL -4 லேத் மெசின் புதியது விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி. 2784)

க. பொ. த. (உ. த.) பிரயோக கணிதப் பயிற்சிப் புத்தகம் 'நிலையியல் பகுதி 1'' எங்கும் விற்பனையாகின்றது. 1990, 1991 பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டத்திற்கமைந்தது. யாழ். முன்னணிக் கல்லூரிகளின் ஆசிரியர்களால் சிபார்சு செய்யப்பட்ட நூல். ஆசிரியர்: சி. துரையப்பா, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். (சி 2808)

சாவகச்சேரியில் கண்டி றோட் ஆஸ்பத்திரிக்கு முன்பாக சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் கூடிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- பொன்னுத்துரை இராஜேந்திரம், பருத்தித்துறை வீதி கொடிகாமம், அல்லது இரத்தினம் சந்திரகுமார் மாக்கற் லேன் கொடிகாமம். (சி. 2782)

### தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம், வெண்கலம் உயர் விலைக்கு எடுக்கப்படும். பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2752)

### கல்வி

G. C. E. மற்றும் லண்டன் பரீட்சைகளுக்கான ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆங்கிலம் ஆகியவற்றுடன் Spoken English [ஆங்கில சம்பாஷணை] வகுப்புகள் புதிய பிரிவு 5-6-89 ஆரம்பமாகின்றன. 173, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். [சி-2790]

## இன்று கந்தசாமி நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

இன்று தியாகி கந்தசாமி தினமாகும்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தியாகி கந்தசாமி, 1947-ல் நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தின் போது, சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

## நகைகள் கொள்ளை

(வேலணை)

அல்லைப்பிட்டி சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இரு நகைக்கடை உரிமையாளர்களிடமிருந்து இனந்தெரியாதவர்கள் ஆயுதமுனையில் தங்கநகைகளையும் ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துள்ளனர்.

கடந்த வெள்ளி இரவு யாழ் நகரிலுள்ள தங்கள் கடைகளைப் பூட்டிவிட்டு வீடுதிரும்பிய போதே இச்சம்பவம் நடந்துள்ளது.

வேலணை கிழக்கைச்சேர்ந்த சு. கருணானந்தன், த. தர்மபாலன ஆகிய இரு நகைக்கடை உரிமையாளர்களிடமே நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# கிளிநொச்சியில் 300 வீடுகள், 40 கிணறுகள்: ஐ. நா. அமைக்கும்

(யாழ்ப்பாணம்)

''ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஸ்தாபனத்தினர், கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென முன்னூறு வீடுகளையும், நாற்பது கிணறுகளையும் விரைவில் அமைக்கவுள்ளனர்.

1988-ம் ஆண்டு தீட்டிய மேற்படி திட்டத்தை இது வரை காலமும் நடைமுறைப் படுத்தமுடியாமல் இருந்ததாகவும் இப்போது இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஐ. நா. நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திட்டவேலைகளை ஆரம்பிப்பது குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்த ஸ்தாபனத்தின் அமைப்பாளர் திரு.சொலமன் அரசாங்க அதிபரை அடுத்த வாரம் சந்தித்துப் பேசவுள்ளார்.

## 'ஷெல்' தாக்குதல்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி மாயவனூரில் மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் மூன்று வீடுகள் தீக்கிரையானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை பகல் இடம்பெற்ற இத்தாக்குதலைத் தொடர்ந்து இப்பகுதியில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவியது.

## உற்சவம்

(உடுப்பிட்டி)

பொலிகண்டி கந்தவனம் கோவில் வருடாந்த உற்சவம் இன்று இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இம்மாதம் 18ம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

## கடற்றொழிலாளருக்கு ஐ.நா. 24 வள்ளங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு 17½அடி நீளமான கண்ணாடி இழை நூல் இயந்திர வள்ளங்களை வழங்கியுள்ளது.

இந்த 24 வள்ளங்களும் அண்மைக்கால கலவரங்களினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

## கடற்றொழில்அபிவிருத்திக்கு 5 ஆண்டுத் திட்டம்

### யாழ்., கிளிநொச்சியில் மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்காக ஐந்துவருட அபிவிருத்தி திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக இம்மாவட்டங்களில் கடற்றொழிலாளர் மதிப்பீடுகள் நடைபெற்று வருகிறது.

பத்துவருடத்திற்கு ஒரு தடவை நடைபெறும் இந்த மதிப்பீடு கடந்த 1982ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அன்று நாட்டிலிருந்த சூழ்நிலைகாரணமாக இது மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகிறது.

முதலாம்கட்ட மதிப்பீடு வேலைகள் முடியும் தறுவாயிலிருப்பதாகவும், இரண்டாம் கட்ட மதிப்பீட்டின் பின்னரே இந்த ஐந்துவருட அபிவிருத்தி திட்டம் பற்றி முடிவு எடுக்சப்படும் என்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

## புற்றுநோயாளருக்கு அரச உதவிப் பணம்!

(யாழ்ப்பாணம்)

புற்று நோயாளருக்கான உதவிப்பணம் பெறுவதற்கு நூற்றுக்குமதிகமான விண்ணப்பங்கள் யாழ். சமூக சேவைப்பகுதிக்கு வந்து குவிந்துள்ளன.

இந்த விண்ணப்பங்களின் ஒருபகுதி கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. கொழும்பின் அனுமதி கிடைத்ததும் விண்ணப்பதாரிகளுக்கு உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

வறுமைக் கோட்டுக்குக்கீழே வாழும் புற்று நோயாளர்களுக்கே இந்த உதவிப்பணம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவிக்சப்படுகிறது.

250 ரூபா முதல் 500 ரூபா வரையும் புற்றுநோயுள்ள ஒருவருக்கு உதவிப்பணமாக வழங்கப்படும்.

## நிவாரணத்தில்புறக்கணிப்பு கடற்றொழிலாளர் புகார்

(யாழ்ப்பாணம்)

தொழில் ரீதியாகப்பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நாலாயிரம் ரூபா நிவாரண உதவி, யாழ்ப்பாணத்திலுள்ள பல கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லையென்று புகார் செய்யப்பட்டுள்ளது.

1983-ம்ஆண்டுக்குப் பின்னர் தொழில் ரீதியாக அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் கடற்றொழிலாளர்களே கடல்வலயச்சட்டம் பாதுகாப்புவலயம் போன்ற இலங்கை அரசின் சட்டங்களால பாதிக்கப்பட்டதாகவும் இந்த நிவாரணத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 18,000 கடற்றொழிலாளர்கள் வசிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவனியா, முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய உதவிப் பொருட்கள்

(வவுனியா)

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக வடக்கு-கிழக்கு மாகாண சபையிடம் கையளிக்கப்பட்ட அலுமினியப் பாத்திரங்கள் வவனியா, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு விரைவில் கிடைக்க இருக்கிறது.

வவனியா மாவட்டத்திற்கு ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ள பொருள்களின் விபரம்:

அலுமினியப் பாத்திரங்கள்—59,256 ஊன்றுகோல்கள 124 சோடி பாடசாலை மாணவர்களுக்கு இரண்டாயிரம் மீற்றர் சீருடை துணிஅப்பியாசக் கொப்பிகள் 3500,

முல்லைத்திவு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவை வருமாறு:

அலுமினியப்பாத்திரங்கள் 59236, ஊன்றுகோல்கள் 143 சோடி, சீருடைகள் 3000மீற்றர் துணி, அப்பியாசக்கொப்பிகள் 6000.

இத்தகவலை வட-கிழக்கு மாகாணசபையின் முல்லைத்தீவு பிரதிநிதியான திரு. எக்ஸ். ஜெயசீலன் தெரிவித்தார்.

## பஸ் விபத்து: மூவர் பலி

[நமது நுவரெலியா நிருபர்]

நாவலப்பிட்டி - தொளஸ்பாக வீதியில் நாவலப்பிட்டி பஸ் டிப்போவிற்குச் சொந்தமான பஸ் ஒன்று பிரயாணிகளுடன் சுமார் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து நொருங்கியது.

விபத்து நடந்த இடத்திலேயே மூவர் மரணமானார்கள். பஸ்சாரதி உடபட இன்னும் ஒருவர் கண்டி அரசினர் வைத்தியசாலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு மரணமானார்கள்.

காயமடைந்த அனைவரும் நாவலப்பிட்டி, கண்டி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

பஸ்சாரதி மதுபோதையில் பஸ்சை செலுத்தியமையே விபத்திற்கு காரணமென விபத்தில் காயமடைந்த பிரயாணிகள் விசாரணையின் போது தெரிவித்தார்கள்.

## பாராட்டு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரியாகப்பணியாற்றி கால்நடை சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாள (வன்னிப்பகுதி) ராகப் பதவி உயர்வுபெற்றுள்ள வைத்திய கலாநிதி எம், தங்கராஜாவின் சேவைகளைப் பாராட்டி வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் விழாவொன்றை இம்மாதம் 11ம் திகதி நடாத்துகின்றது.

வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு வடமராட்சி கால்நடை [illegible] சங்கத்தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமைதாங்குவார்.

## வடக்கு, கிழக்கில் பாதிப்புற்ற இராணுவத்தின் குடும்பத்திற்கு நிதிஉதவி

### ஜனதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த காலங்களில் கடமையாற்றி பாதிக்கப்பட்ட இலங்கை இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்க ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசா நடவடிக்கைகளை மேற்கொணடுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983—ம் ஆண்டிலிருந்து இது வரை வடக்கு கிழக்கு பகுதியில் தமிழ்ப்போராளிகள் குழுக்களுடன் இடம்பெற்றமோதயகளில் கொல்லப்பட்ட, காலமடைந்த, அங்கவீனர்களான படையினரின் குடும்பங்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

## பயிற்சிபெற்றும் நியமனம் கிடைக்காவிடின் கல்விச்சேவைக் குழுவுடன் தொடர்பு கொள்ளவும்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கும், தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்களுக்குமான முன்னைலச் சேவைப்பயிற்சி நெறியினை முடித்துக்கொண்ட ஆசிரியர்கள் தாம் பயிற்சி பெற்றதற்கான தராதரச சான்றிதழின் மூலப்பிரதியுடன் ஏனைய பத்திரங்களையும் கல்விச்சேவைக் குழுவுக்கு அனுப்பினுல் நியமனக்கடிதங்கள் வழங்கப்படும். இத்தகவலை கலவிச் சேவைக் குழுவினசெயலாளர் திரு. வீ. டபிளயூ. பண்டார தெரிவித்தார.

கல்விச்சேவைக் குழுவினால் 1986ம் ஆண்டு இறுதியில் கணித, விஞ்ஞானப் புத்திரம் பெற்ற ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு இதில் தெரிவானவர்களுக்கு 1993ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முன்னிலையில் சேவைப்பயிற்சி நடத்தப்பட்டது. இதில் அநேகருககு இன்னமும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவில்லை. இதுபற்றி குழுவின் செயலாளரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெரிவு செய்யபபட்டு பயிற்சி நெறியினை முடித்த சகலருக்கும் நியமனக்கடிதங்கள் வழங்கப்படும் எனவும் பலருக்கு இவ்வாறு வழங்கப்பட்டு விட்டதெனவும் நியமனங்களைப்பெறவேண்டியவர்

(7ம் பக்கம் பார்க்க)


விற்பனைக்கு

பதனிப்பட்ட பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு.

COUNTRY OF ORIGIN HOLLAND

பிள்ளையார்

259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் (சி-2785)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சீன மாணவர் போராட்டத்தில் பலாத்காரம் பிரயோகம்:

# ‘தியனென்மென்’ சதுக்கம் ராணுவத்தின் கட்டுப்பாட்டில்

## படையினர் தாக்குதலில் பலர் பலி

(பீக்கிங்)

**சீனுவில் மாணவர் போராட்டம் இடம்பெற்று வந்த பீக்கிங் ‘தியனென்மென்’ சதுக்கத்திலிருந்து சகல மாணவர்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர். தற்போது சதுக்கம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் எட்டுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாமெனக் கூறப்படுகிறது.**

கடந்த நான்கு வாரங்களாக ‘தியனென்மென்’ சதுக்கத்தில் இடம்பெற்றுவந்த மாணவர்களின் ஜனநாயகப் போராட்டம் பலவந்தமான முறையில் முறியடிக்கப்பட்டிருக்கிறது. எனினும் மாணவர் போராட்டம் நாட்டின் வேறு சில பகுதிகளில் ‘பலவீனமடைந்த’ நிலையில் இடம்பெற்றுவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர பிரதம மந்திரி திரு. லீ பெங் கடந்த இரு வாரங்களுக்கு முன் இராணுவச் சட்டத்தை அமுல் நடத்தினர். ஆனல் கட்சியின் தலைமைப்பீடத்திலும், இராணுவ உயர் மட்டத்திலும், மாணவர் மத்தியிலுமிருந்த எதிர்ப்புக் காரணமாக அவரது முயற்சிக்கு அன்று தோல்வி ஏற்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர் தமது போராட்டத்தைச் சிறிது தளர்த்திய போது அரச தலைமைப்பீடத்தில் ஏற்பட்ட பதவிப்போட்டியில் திரு. லீ பெங் முன்னிலையில் வந்து எதிர்ப்பாளர் பலரை வெளியேற்றினர். இதன்மூலம் அரசுக்கு எந்த நிலைமையையும் எவ்வகையிலும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கிடைத்தது.

இராணுவத்திற்கு வழங்கப்பட்ட முழு அதிகாரமும் தற்போது நாட்டின சகல பகுதிகளிலும் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சியில் இராணுவத்தினர் பலாத்காரத்தைக் கடுமையாகப் பிரயோகித்துவருகின்றனர். இதனுல் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்கும், டாங்கிகளின் நெரிசலுக்குமிடையில் சிக்கி எட்டுப்பேர் வரையில் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுக்கெதிரான மாணவர் போராட்டம் கடந்த ஒரு வாரமாக பிசுபிசுத்துப்போய் மந்தநிலையிலேயே குறைந்த தொகையினரால் நடாத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளுக்குத் தற்போது சீனுவில் தணிக்கையும் கடும் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே.

---

## பழைய ‘டாங்கி’கள் விமானங்களையே

# அமெரிக்கா அழிக்கும்

(வாஷிங்டன்)

நேட்டோ நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க அதிபரின் ஆயுதக் குறைப்பு யோசனைகளின்படி ஐரோப்பாவில் உள்ள மிகவும் பழமையான டாங்கிகள், விமானங்கள் மற்றும் பழைய ஆயுதங்கள் மட்டுமே அழிக்கப்படவுள்ளன.

வாஷிங்டனில் செனட் முப்படைக் கமிட்டி கூட்டத்தில் பேசுகையில் அமெரிக்ககூட்டுப்படைக்குழுவின் துணைத்தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார். புதிய ஆயுதங்களை அழிக்கும் எந்தவொருஎண்ணமும் அமெரிக்காவுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

விலக்கிக்கொள்ளப்பட்ட எல்லா ஆயுதங்களும் அழிக்கப்படும் என்று நேட்டோ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதையடுத்தே அவர் இந்த விளக்கத்தை அளித்தார்.

நேட்டோ நாடுகளின் உச்சிமாநாட்டில் அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ்சின் ஆயுதக் குறைப்பு யோசனைகளை சோவியத்யூனியன் வரவேற்றுள்ளது.

எனினும் குறுந்தொலைவு ஏவுகணைகளை அகற்றுவது குறித்து உடனடியாக பேச்சுக்கள் நடத்த ‘நேட்டோ’ மறுத்தது குறித்து தாம் ஏமாற்றம் அடைந்திருப்பதாகவுட சோவியத் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## ஆஸி. - இங். 1-வது டெஸ்ட் கிரிக்கெட்

(லண்டன்)

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை ஹெடிங்கிலியில் ஆரம்பமாகிறது.

இங்கிலாந்து கோஷ்டிக்கு டேவிட் கவார் தலைமைதாங்குகிறுர். ஆஸ்திரேலிய கோஷ்டிக்கு அலன்போடர் தலைமை வகிப்பார்.

---

### அடுத்த சில தினங்களில்

## சாதாரண வாழ்க்கையை குழப்பத்திட்டமா?

### உஷார்நிலையில்பொலிஸ் நிலையங்கள்!

[கொழும்பு]

நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த சில தினங்களில் நாட்டில் சாதாரண வாழக்கையைக் குழப்புவதற்கு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுவருவதாக தகவல்கள் கிடைத்திருப்பதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நாட்டில் சாதாரண வாழ்க்கையைக் குழப்பும் முயற்சிகளைத் தடுக்கும் நோக்கத்துடன் சட்டம், ஒழுங்கு போன்றவை கடுமையாக அரசாங்கத்தினுல் அமுல்படுத்தப்படும்.

கொழும்பில் ஏற்கனவே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதேவேளையில் நாட்டில் சகல பகுதிகளிலும் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்கும்படி அவ்வப் பகுதிகளிலுள்ள பொலிஸ்நிலையங்களுக்கு உத்தரவுகள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

---

## 10 வருட உள்நாட்டு நெருக்கடி: எல்சல்வடோர் போரில் 70 ஆயிரம் பேர் பலி!

(சான்சல்வடோர்)

எல்சல்வடோரில் கடந்த 10 வருடங்களாகஇடம்பெற்றுவரும் உள்நாட்டுப்போரில் 70,000 பேர் கொல்லப்பட்டும் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பல்வேறு விதங்களிலும் பாதிக்கப்பட்டும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது எல்சல்வடோரில் நடைபெற்றுவரும் உள்நாட்டு போரில் இடதுசாரிச் கெரில்லாக்கள் ஆட்சியாளர்களை எதிர்த்து பலகிளர்ச்சிநடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனர். இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பேச்சுக்கள் நடாத்த வருமாறு நாட்டின் புதியஅதிபர் திரு. அல்பர்டோ கிறிஸ்ரியானி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனினும் பேச்சுவார்த்தைகள் நடாத்த கெரில்லாக்கள் முன்வைத்த சில்நிபந்தனைகளையும் அவர் நிராகரித்துள்ளார். நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கே அவர் அழைப்புவிடுத்துள்ளார். இதனை கெரில்லாக்கள் ஏற்க மறுத்துள்ளனர்.

அரசு எதிர்ப்பு நடவடிக்கையாக கடந்த மூன்று தினங்களாக எல்சல்வடோரின்முக்கிய பலபகுதிகளையும் செயலிழக்கச் செய்துள்ள கெரில்லாக்கள், தொடர்ந்தும் தமது எதிர்ப்பு நடவடிக்கை அளவில் நடைபெறுமென்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

---

## இறம்பைக்குளத்தில் 3 லொறிகள் கடத்தல்

[illegible]

இறம்பைக்குளத்தில் மூன்று லொறிகள் இனந்தெரியாதவர்களினுல் கடத்தப்பட்டது.

இந்தலொறிகளில் கொண்டு

(6-ம் பக்கம் பார்க்க)

---

## பி. பி. ஸி. தமிழோசைக்கு தமிழக தலைவர்களின் நன்றிக் கடிதங்கள்

(லண்டன்)

பி. பி. ஸியில் தமது பேட்டிகளை வெளியிட்டு தமிழக தேர்தல் பிரசாரத்திற்கு உதவிய பி. பி. ஸி. தமிழோசைக்கு தமிழக அரசியல் தலைவர்கள் பலர் நன்றிக் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

இவ்வருட முற்பகுதியில் தமிழகத்தில் நடைபெற்ற தேர்தல்களின் போது பல கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்களது பேட்டிகளை பி. பி. ஸி. தமிழோசையில் திரு. சங்கரமூர்த்தி (சங்கர்)ஒலிபரப்பியதுதெரிந்ததே.

இந்தப் பேட்டி ஒலிபரப்பிற்கு நன்றி தெரிவித்து தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி. எதிர்க்கட்சி தலைவி செல்வி. ஜெயலலிதா, தமிழக காங்கிரஸ்கட்சி முன்னுள் தலைவர் திரு. கருப்பையா மூப்பனுர் கம்யூனிஸ்கட்சி செயலாளர் திரு. இராமமூர்த்தி, மற்றும் திரு. இரா. செழியன் உட்பட பல தலைவர்களும் பி. பி. ஸிக்கு தமது நன்றிக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

---

## ‘நேரு’ கிண்ண கிரிக்கெட்: ஆறு நாடுகள் பங்குபற்றும்

(புதுடில்லி)

இந்திய முன்னுள் பிரதமர் அமரர் பண்டித ஜவஹர்லால் நேரு நூற்ருண்டு வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டி அக்டோபர் மாத பிற்பகுதியில் இந்தியாவில் ஆரம்பமாகிறது. இப்போட்டியில்ஆறு நாடுகள் கலந்துகொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளும் சகல நாடுகளுக்கும் இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. போட்டிகளில்தாம்கலந்துகொள்ளவுள்ளதாகஇங்கிலாந்து, பாகிஸ்தான், நியூஸிலாந்து நாட்டுக் குழுக்கள் அறிவித்துள்ளன. விரைவில் ஆஸ்திரேலியாவும் இதற்கான முடிவை அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கிந்திய அணி இப்போட்டியில் கலந்துகொள்வது நிச்சயமில்லையென்று தெரியவருகிறது. நவம்பர் மாத முற்பகுதியில் கனடாவில் நடைபெறவிருக்கும் போட்டி ஒன்றில் கலந்துகொள்ள ஏற்கனவே மேற்கிந்திய அணி ஒப்புக்கொண்டுள்ளநாலேயே இப்போட்டியில் கலந்து கொள்ளுமா என்பது தெரியவில்லை எனினும் கனடாவில் நடைபெறவிருக்கும் இப்போட்டியைப் பிற்போடுமாறு சம்பத்தப்பட்டவர்களைக் கோரும் மகஜர் ஒன்றை நேரு வெற்றிக்கிண்ணக் போட்டிக் குழுவினர் தயாரித்துள்ளனர்.

அக்டோபர் 25ம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 12ம் திகதி வரை நடைபெறும் இந்தச் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி 50 ஓவர்களைக் கொண்டதாகும் இச்சுற்றுப் போட்டியில் சாம்பியன் பட்டத்தைப்பெறும்அணி 114,000 அமெரிக்க டாலரைப் பரிசாக பெறும்.

லீக் முறையில் நடைபெறவிருக்கு இப்போட்டியில் ஒவ்வொரு அணியும் மற்ற ஒவ்வொரு அணியுடனும் போட்யிலீடுபடும். அரையிறுதி போட்டிக்கு நான்கு அணிகள் தெரிவு செய்யப்படும். இறுதிப் போட்டி கல்கத்தாவில் நடைபெறுமென்றும் தெரிவிக்கப் படுகிறது.

---

## காணுமல்போன பல்கலைக்கழக மாணவர்பற்றி விரைவில் விசாரணை

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர் காணுமல் போனது தொடர்பான விசாரணைகள் ஜனுதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவினுல் விரைவில் மேற்கொள்ளப்படும்.

முதலில் இவ்வருட முற்பகுதியில் காணுமல் போன சுனில் மாரசிங்க, சுனந்தா ஜெயவர்த்தன, உபுல் எக்கநாயக்க, வண. தலம்பிட்டிய ஆகியோர் பற்றிய விசாரணைகள் நடைபெறவுள்ளது.

இதற்கான உதவிகளை வழங்குமாறு மேற்படி விசாரணைக்குழுவின் தலைவர் முன்னுள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஓ. எஸ். எம். செனிவரட்ண, இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சிசில் வியரட்ண, பிரதிப் பொலிஸ் மா அதிபர் மித்ராஆரியசிங்க ஆகியோருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி குழு எதிர்வரும் 8ம் திகதி மீண்டும் கூடவுள்ளது.

---

## 25சத முத்திரை ஒட்டினுலே தந்தி படிவம் கிடைக்கும்

[அரியாலை]

யாழ். குடாநாட்டில் உள்ள சகல தபாலகங்களிலும் தந்திப்படிவம் 25 சதம் முத்திரை ஒட்டப்பட்டபின்பு விநியோகிக்கப்படுகிறது.

தந்தி அனுப்பும்போது தந்திக் கட்டணத்தின் பெறுமதியில் இந்த 25 சத முத்திரைத் தொகை கழிக்கப்படுகிறது.

கொழும்புத் தலைமை அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் இம்மாதம் முதலாந் திகதியிலிருந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக உயர் அதிகாரி தெரிவித்தார்.

இத்தபால்கள் வாரத்துக்கு ஒருமுறை கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

---

## முத்திரை இல்லாத கடிதங்கள்

(அரியாலை)

யாழ். பிரதம தபால் நிலையத்தில் போதிய அஞ்சல் முத்திரை ஒட்டப்படாத கடிதங்களும், முத்திரை ஒட்டப்படாத கடிதங்களும் விநியோகம் செய்யப்படாமல் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிறர் குறை காண்பவன் அரை மனிதன்; தன்குறை காண்பவன் முழுமனிதன்.

— சாக்ரடீஸ்

# நமது நோக்கு

## ஜூன் ஐந்து

**1956** - 1958 - 1961 1977 - 1979 - 1981 - 1983- தமிழ்பேசும் மக்களின் கடந்த முப்பத்துமூன்று ஆண்டு வரலாற்றில் இந்த ஆண்டுகளில் விழுப்புண்கள் ஏற்பட்டன.

தமிழ் பேசும் மக்கள் வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்தது 1956 ஜூன் ஐந்து! அன்றுதான் சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் மீது சிங்களம் திணிக்கப்பட்டு, அரச ஊழியர் நியமனம், பதவி உயர்வு, ஆகியவற்றுக்குப் பாகுபாடு காட்டவும், ஒருபகுதி மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தவும் வழிவகுத்த தினம் அது!

கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என்ற உயர் விழுமியங்களில் அளவுக்கு மீறி நம்பிக்கை வைத்தவர்களைச் சோர்வடையச் செய்த தினம் அதுதான்.

''ஒரு நாடு இருமொழி; ஒரு மொழி இருநாடு!'' என்ற தீர்க்க தரிசன வார்த்தைகளை மறைந்த கலாநிதி கொல்வின் ஆர், டீ சில்வா கூறிவைத்த தினம்!

பல்லாண்டு காலமாகப் போற்றிக்காக்கப்பட்டு வந்தது தமிழ்மொழி. சங்கம் வைத்து ஆராய்ந்து வளர்க்கப்பட்ட தமிழ்மொழிக்குச் சங்கடம் வந்துள்ளதை அறிந்த தமிழ் மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

பிரித்தானியாவின் பிடியிலிருந்து விடுதலை பெற முன்னரே இலங்கைச் சட்டசபையில் மொழிப் பிரச்னை தோன்றியது. தமிழும் சிங்களமும் ஆட்சிமொழிகள் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால், சுதந்திரம் அடைந்ததும், ஆட்சி அதிகாரங்களைப் பெரும்பான்மையோர் சுவைக்கத் தொடங்கியதும்; சிங்களம் மட்டும், சிங்களப் பௌத்தர்கள் என்ற எண்ணக் கோலங்கள் மேலோங்கத் தொடங்கிவிட்டன.

குடியேற்றத் திட்டங்கள் மூலம் இன ஒதுக்கல் கொள்கை ஏற்கனவே தொடங்கியிருந்தது. குத்திக்காட்டிய போதெல்லாம் சமாதானங்கள், விளக்கங்கள் கூறப்பட்டன. ஆனாலும், 1956 ஜூன் ஐந்துதான் பெரும்பான்மை இனத்தவர்களின் சுயரூபம் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது.

குட்டக்குட்டக் குனிந்து நிற்பதற்கும் கால எல்லையுண்டு என்ற உண்மை மிளிரத் தொடங்கியது. இளைய தலைமுறையினர் திருப்பிக் குட்ட முற்பட்ட பின், இவர்கள் ஏன் திருப்பிக் குட்டுகிறார்கள் என்று அகில உலகமும் விழித்தெழுந்து வினா எழுப்பிய பின்தான் ஆட்சியில் உள்ளவர்களுக்குக் குற்ற உணர்வு ஏற்பட்டது. தவறுகளை ஏற்றுக் குறை களைய முன்வந்தார்கள். ''எம் தவறல்ல; அவர்களுடையதே!'' என்று ஆளுக்காள் குற்றம் சுமத்தவும் முற்படுகின்றனர்.

''நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்'' இது அழகான சொல்லோவியம்! ஆனால், இடையிடையே வரலாற்றைச்சுட்டிக்காட்டுவதன் மூலம் இனிமேல் இத்தகைய தவறுகள் தடுக்கப்படலாம் என்பது எமது நம்பிக்கை!

## பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட விசேட விசாரணைப் பிரிவின் அதிபர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி திரு. பெனட் பெரேரா பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

இவரது கொலை குறித்து விசாரணை நடத்துவதற்கு கல்கிசை பொலிஸ் சுப்பிரின்டென்ட் திரு. ரி. வி. சுமனசேகர தலைமையில்தனித்தனியாக மூன்று விசேட பொலிஸ் கோஷ்டிகள் நியமிக்கப்பட்டுள்ளன,

திரு. பெனட்பெரேராகொலை பற்றிய தகவல் எதையும் கொடுப்பவர்களுக்கு ஒருலட்சம் ரூபா சன்மானம் பொலிஸாரினால் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தலைசிறந்த துப்பறிவாளராகக் கருதப்படும் திரு. பெனட் பெரேரா கட்டுநாயக்காவில் இடம்பெற்ற 'ஏயர் லங்கா' விமானக் குண்டு வெடிப்பு, பாராளுமன்ற குண்டுவெடிப்பு ஆகியன உட்பட பல முக்கிய சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட பொலிஸ் அதிபரின் கார்ச் சாரதியும் சார்ஜன்டாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அண்மையில் புனராவர்த்தனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் ஆதிமூலம் அர்த மண்டபம் நிதர்சன மண்டபம், வசந்த மண்டபம் என்பவை ஸ்தபதி சு, ஐயாத்துரையினால் கட்டப்பட்டு வருகின்றன.

இக்கட்டிடத்திற்கான நிதியுதவியை இப்பகுதியைச் சேர்ந்த வெளிநாட்டு இளைஞர்களும் அப்பகுதிவாழ் மக்களும் வழங்கியுள்ளனர்.

கும்பாபிஷேகம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறுமென பரிபாலன சபையின் செயலாளர் திரு. மு. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

# இன்று நயினைநாகபூஷணி அம்மன்கொடி

# நாடிவரும் அடியவர்க்கு நலிவகற்றும் அம்மன்

''பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும் பேணலாலன்னை
பெற்றிடுவோர் உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும் உதவலாலன்னை
எக்கலையும் சொற்றதாலன்னை உலகொடுவானும் தொழுதலாலன்னை
யென்றென்றும் பற்றதாங் கருணை பொழிதலாலன்னை பராபரை நாகபூடணியால்''

இவ்வாறு அகிலாண்ட கோடியீன்ற அன்னையை மறைகள் கன்னியெனப் போற்றுகின்றன. இந்த அன்னையானவள் நாகம் அணியும் பரமர் (பரமசிவன்) பாகம் உறுவதினால் நாகபூஷணி என்னும் நாமம் பூண்டு நயினாதீவிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து தம்மை நாடிவரும் அடியவர்க்கு நலிவகற்றி அவர்தம் வாடிய உள்ளம் குளிர வரமருளுகின்றாள்.

அந்த உலகநாயகியின் வருடாந்த மகா உற்சவம் இன்று நண்பகல் 12 மணி அளவில் கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகின்றது. ஆடிவரும் ஓடம் எல்லாம் அரோகரா ஒலிக்க மக்கள் சமுத்திரத்தின் மத்தியிலே அம்பிகையானவள் அழகிய எருது வாகனத்திலே ஆரோகணிக்கப்பட்டு வீதி உலாவரும் அலங்காரக் காட்சியைக் காணக் கண் ஆயிரம் வேண்டும். காணின் கருங்கல் மனமும் கசிந்துருகும் என்பர். இவ்வுற்சவத்தின் மகிமையினை சொற்பிரபஞ்சத்திற்கு அடக்கமுடியாது.

''சொல்லுக்கடங்காவே பராசக்தி சுரத்தனங்களெல்லாம் என்று பாரதி பாடிய தன் மாட்சி நயினையிலே ஆட்சி செய்கின்றது எனலாம். ''மனிதரும். தேவரும், மாயா முனிவரும் வந்து வணங்கும் அந்த அன்னையானவள் அவர்களுக்கெல்லாம் நல்லன எல்லாம் நல்கி, [illegible]ணையாய், தொழும் தெய்வமுமாய் இருக்கின்றாள்.

—கிருஷ்ணசாமி கிருபானந்தா

### ஆழக் கடல்மிசை அமர்ந்தருள் சுரப்பாள்

ஆழக் கடல்மிசை அமர்ந்தருள் சுரப்பாள்
அலைகளின் மீதவள் நர்த்தனம் புரிவாள்
சூழச் சுழன்றெழு தென்றலில் இன்பச்
சுகந்தனை முகந்திடும் இதந்தனை அளிப்பாள்
வாழப் பொருளறி வாற்றலைத் தருவாள்
வையத் துன்பமிகு வனப்பொடு பொலிவாள்
ஞாலஞ் சிறந்திட நன்மைகள் செய்வாள்
நயினை நாக பூஷணி அம்மாள்

நாக. சண்முகநாதபிள்ளை

## சித்திரைமாத பத்திரிகைச் சிறுகதைகள்

''ஈழகேசரி பொன்னையா, இரசிகமணி கனக. செந்திநாதன் போன்றோர் ஆரம்பித்த இலக்கியப் பணியை குரும்பசிட்டிசன்மார்க்க சபை தனது 55-வது வருட முடிவிலும் தொடர்வதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்'' என்று கலாகேசரி ஆ. தம்பித்துரை சன்மார்க்க சபையில் நிகழ்ந்த 'சித்திரை மாதப் பத்திரிகைச் சிறுகதைகள்' என்ற கருத்தரங்குக்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வீரகேசரி கதைகள் பற்றி சிற்பி அவர்களும், முரசொலி, திசை, சஞ்சீவி, தினகரன் கதைகள் பற்றி முறையே இலங்கை வங்கி உத்தியோகத்தர் திரு. எஸ். குமாரலிங்கம், ஆசிரியர் ஆ. மகாதேவன், ஆசிரியர் வி. என். சுப்பிரமணியம், சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் அ. இராமநாதன் ஆகியோர் விமர்சித்தனர்.

மனித மேம்பாட்டுக்குச் சிறுகதை துணைபுரியவேண்டும். சிறுகதை இலக்கியத்தின் பாற்பட்டதல்ல என்ற பழைய வாதம் வலுவிழந்துவிட்டது என்ற கருத்துக்களை முன்வைத்த சிற்பி தர்க்கரீதியான காரண காரியத் தன்மைகொண்ட இயற்கையான ஆக்கமாகச் சிறுகதைகள் அமையவேண்டுமென்றார்.

புதுமைப்பித்தன் சிருஷ்டிகள் போல பயனுள்ள விஞ்ஞான பூர்வமான ஆக்கங்கள் இன்றைய தேவை எனவும் குழந்தைகளுக்குரிய கதைகளில் மந்திர தந்திரக் கதைகள் பயனற்றவை எனவும் திரு. எஸ். குமாரலிங்கம் தெரிவித்தார்.

'திசை' பத்திரிகைக் கதைகள் நல்லவை எனச் சுட்டிய ஆ. மகாதேவன், மறுபிரசுரக் கதைகள் கூடத் தரமுயர்ந்து நிற்பதைக் காட்டினார். வரதரின் 'கற்பு', முருகானந்தனின் 'பிரஜா உரிமை' வலுவான கருவை காலரூபத்தில் வாசகர்களுக்குத் தந்த விதத்தை விதந்து பேசினார்.

'சஞ்சீவி' கதைகள் பற்றிப் பேசிய வி. என். சுப்பிரமணியம் ஆரம்ப எழுத்தாளர்களை [illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மதிய உணவுத் திட்டம்: மாணவர்களுக்குப் பயன்பட கல்வி அதிகாரிகள் கண்காணிக்கவும்

பாடசாலைகளின் மதிய உணவுத் திட்டம், வெளிநாட்டின் உதவியுடன் நடைபெறுகின்றது என்பது எல்லோரும் அறிந்ததே. இத்திட்டத்தில் யாழ். மாவட்டத்துக்கு 1 கோடியே 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி இலாகா அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் இப்பணம் முறைப்படி செலவு செய்யப்பட வேண்டும். அதிபர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்திச்சங்கங்கள், பொதுநல ஸ்தாபனங்கள், பெற்றோர், பழையமாணவர்கள் இப்பணம் சரிவர செலவு செய்யப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். கோட்டக்கல்வி அதிகாரிகளின் திடீர்ப் பரிசோதனைக் குழுக்கள் நாளாந்தம் பரிசோதனைகளை நடத்தி, மாவட்டக்கல்வி அதிகாரிக்குப் புள்ளிவிபரங்கள் மற்றும் செயல் குறைபாடுகளையும் அதைநிவர்த்தி செய்ய வேண்டிய நடவடிக்கைகளையும் பற்றி தினமும் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது நல்லது. பொதுமக்கள் இம்மதிய உணவுத்திட்டம் எவ்வாறு செயற்பட்டு வருகின்றது என்பதை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். பல ஏழைச் சிறார்கள் இத்திட்டத்தின் பயனாக போஷாக்குள்ள சத்துணவை உண்பதற்கு நல்லதொரு வரப்பிரசாதம் என நாம் நம்புகின்றோம். காலையுணவு அருந்தாமல் செல்லும் பல சிறார்களுக்கு இம்மதிய உணவு மிகுந்த ஆதாரமாக உள்ளது. அவர்கள் கல்வியில் நாட்டம் கொள்வதற்கு இத்திட்டம் மிகுந்த ஊக்கமளிக்கின்றது யாராவது இம்மதிய உணவு திட்டத்திற்கு இடையூறாக இருந்தால் அவர்கள் மேல் கல்வி இலாகா கடும் நடவடிக்கை எடுக்கத் தவறக் கூடாது. தற்போது கல்வி இலாகா போதிய அளவு பணம் முற்பணமாக எல்லாப் பாடசாலைகளுக்கும் கொடுத்துள்ளது. ஆகவே எக்காரணம் கொண்டும் அதிபர்கள் இத்திட்டத்திற்கு இடையூறாக இருத்தல் கூடாது எனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வி. எஸ். இராமநாதர்
(செயலாளர்)
தமிழர் முன்னேற்றக்கழகம்,
யாழ்ப்பாணம்.

### மக்கள் கருத்து

## பயிற்சி முடித்தும் நியமனம் இல்லை!

விஞ்ஞான கணித ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டு பயிற்சியை முடித்துக்கொண்ட இன்னும் பலருக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. அண்மையில் 107 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. அதன்பின்னர் சிலர் நேரடியாகச் சென்று தமது நியமனக் கடிதங்களைப் பெற்றதாகத் தெரியவருகிறது.

இன்னமும் நியமனக்கடிதங்கள் பெறாதவர்கள் கொழும்பிலுள்ள கல்விச் சேவைக் குழுவுக்கு நேரடியாகச் சென்றால் நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார். எனினும் உண்மைநிலை தெரியாத பலர் என்ன செய்வதென்று தெரியாது உள்ளனர். உரிய அதிகாரிகள் இவ்விடயம் குறித்து ஆவன செய்ய வேண்டும்.

கே. பி. குமார்
யாழ்ப்பாணம்.

## புதிய சந்தை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியிலுள்ள மீன்விற்பனையாளர்களின் நன்மைகருதி புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தினர் சந்தை ஒன்றை தம்பர் கடைச்சந்தியில் நிறுவியுள்ளனர்.

மீன் விற்பனையாளர்கள் பட்டுவந்துள்ள துன்பங்களைக் கருத்திற்கொண்டே இந்தச் சந்தை அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

சுமார் இருபதினாயிரம் ரூபா செலவில் மேற்படி நிலையத்தினரால் இந்தச் சந்தை அமைக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகள்

"புகையிரத இலாகாவில் அக்காலத்தில் மாதாந்த மாநாடு நடைபெறுவது வழக்கம். ஊழியர்கள் பங்குபற்றுவர். பல்வேறு விடயம்பற்றி ஆராயப்படும். ஒருமுறை பிரதம கணக்காளர் இம்மாநாட்டில் ஒரு கேள்வி எழுப்பினர்.

வடபகுதி ரயில் நிலையங்களில் சோர்வு குறைவாக இருப்பதேன்? என்பதுதான் அந்தக் கேள்வி.

''வடக்கில் சகல ரயில் நிலயங்களிலும் அநேகமாக தமிழர்கள்தான் நிலைய அதிபர்களாக பணியாற்றிவந்தனர்.

ஓய்வு பெற்ற ரயில்வே பகுதி பரிசோதகரான திரு. எஸ். சண்முகம் தமது அனுபவங்களை மேலும் விளக்குகிறார்.

இதனால் மாநாட்டில் இருந்த தமிழ் ஊழியர்கள் சகலரும் ஒருவரையொருவர் பார்த்தனர். இந்தக்கேள்விக்கு பதிலே வரவில்லை,

## கணக்காளரை சிந்திக்கவைத்த பதில்

''நான் உடனே எழுந்து பதில் கொடுத்தேன் அந்தப் பதில் கணக்காளரையே சிந்திக்கவைத்துவிட்டது.''

'என்னபதில் கொடுத்தீர்கள்?' என்று அவரிடம் கேட்டேன்.

## வாழ்க்கையில் இறுதிக்காலத்தில்

''உண்மையைச் சொன்னேன் வழக்கமாக அதிகமான தமிழர்கள், ஆரம்பத்தில் தெற்கில் கடமையாற்றிவிட்டு வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் தான் தமது சொந்த இடத்தில் கடமையாற்றுவார்கள். ஓய்வூதியம் பெற்றுப் பிள்ளைகளைக் கரைசேர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில்தான் இருப்பார்கள். அதனால் சந்தோர் காசில் கைவைக்கமாட்டார்கள், அதனால் தான் சோர்வு ஏற்படுவதில்லை என்று மாநாட்டில் கூறினேன்.

'இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

## தமிழர்கள் கடும் உழைப்பாளிகள்

''எல்லா தமிழரும் இப்படித்தான். அவர்கள் கடும் உழைப்பாளிகள். மேலதிக வேலை செய்யப்பின்நிற்கமாட்டார்கள். அதிகபணம் 'ஓவர்டைம்' மூலம் கிடைக்கும், அவர்களிடம் போதியளவு பணம் இருக்கும். அதனால் களவு, கையாடல், எதுவும் நடைபெறாது சொன்னவேலையைஒழுங்காகச் செய்வார்கள். தட்டிக்கழிக்கமாட்டார்கள். இதனால் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெற்றுவிடுவார்கள். அவர்களின் முன்னேற்றத்திற்கு இதுதான் காரணம். அது மட்டுமல்ல காசில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள் அனாவசியமாகச் செலவிடமாட்டார்கள்.''

''அப்போதுரயில்நிலையஅதிபர் ஒருவருக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்கும்?''

''மாகோ போன்ற பெரிய சந்திகளில் கடமையாற்றினால் அப்போது எல்லாமாக 1500 ரூபாவுக்கு மேல்வரும். அந்தக் காலத்தில் இது ஒரு பெரிய தொகை. பொல்காவலை, மருதானை, கல்லோயா, மாகோ போன்ற சந்திகளில் அனுபவம் உள்ளவர்களைத்தான் விடுவார்கள். இங்கெல்லாம் தமிழர்களும் கடமையாற்றியிருக்கிறார்கள்.

'ஏதாவது ரயில் நிலயத்தில் நடந்த திருட்டு ஞாபகமிருக்கிறதா?'

## சம்பளப்பணம் திருட்டு

'மட்டக்களப்பு ரயில் நிலைய ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க 35,500 ரூபா அனுப்பப்பட்டது. ரயில்நிலையஅதிபர் அதனை இரும்புப்பெட்டியில் வைத்து பூட்டிவிட்டார். ஆனால் அப்பணம் அதிபருக்குத் தெரியாமலே மாயமாகமறைந்துவிட்டது. இதுபற்றி பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டு விட்டது. புகையிரத நிலைய அதிபரே இரும்புப்பெட்டியில் பணத்தை வைத்துபூட்டியிருக்கிறார். பின் அவரேதிறந்து பார்க்கும்போது பணம்இல்லை. பொலிஸாருக்கு அவர்மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறுவழிதெரியவில்லை.

நல்லகாலமாக ரயில்வேப் பகுதி விசாரணை உத்தியோகத்தர் ஒருவரும் விசாரணைக்குச் சென்றிருக்கிறார். அவர் ஒரு தமிழர். அவர் நேராக அதிபரின் காரியாலயத்துக்குசென்று இரும்புப் பெட்டிக்கு அருகில் இருந்த 'லொக் புக்'கை பார்த்திருக்கிறார். அதில் அதிபருக்குப் பதிலாக கடைசியாக ரயில் வந்துபோன விபரத்தை போட்டர் ஒருவர் எழுதியிருந்தார். போட்டர்மீதுசந்தேகம் எழுந்தது. இந்தப்பணம்காணமல்போனதினம், அருகிலுள்ள பாலத்தின்மீது கார் ஒன்று மோதிவிட்டுச்சென்றுள்ளது அங்குநின்ற ஊழியர் ஒருவர் காரின் நம்பரைப்பதிந்துவைத்திருந்தார். இந்த விபரமும் தெரியவந்தது. விசாரணை உத்தியோகத்தரின்மூளை வேலை செய்தது, பொலிஸாரிடம் ரயில்நிலையஅதிபருக்குபதிலாக போட்டரை விசாரிக்குமாறு கூறினர், பொலிஸார் விசாரித்தபோது உண்மை வெளியாகியது. போட்டரும் மற்றும் சிலரும் சேர்ந்து

**கா. யோகநாதன்**

இத்திட்டத்தை நடத்தியது அம்பலமாகியது.

## இரும்புப் பெட்டிக்கு போலித் திறப்பு

ரயில்நிலைய அதிபருக்கு தெரியாமல், அவர்பகலில்நித்திரை செய்தபோது, இரும்புப் பெட்டிச் சாவியை எடுத்துவந்து அதேபோல் ஒரு போலித் திறப்பு செய்து வைத்திருந்தனர். வழக்கமாக ரயில்நிலைய அதிபர் போட்டரிடம்சொல்லி விட்டு தமது விடுதிக்கு சென்று விடுவார். அதனைப் பயன்படுத்தி இப்பணத்தைத் திருடிவிட்டனர். பொலிஸ்விசாரணையின்போது பணமும் மீட்கப்பட்டது.

## அனுபவம் உதவியது

விசாரணை உத்தியோகத்தருக்கு ரயில் நிலைய நடைமுறைகள் பற்றிய அனுபவம் இருந்ததினால் உண்மையைக் கண்டுபிடிக்க உதவினர். இவர் வந்திராவிட்டால் பொலிஸார் அந்த அதிபர் மீதே நடவடிக்கை எடுத்திருக்க நேர்ந்திருக்கும்.''

''வேறு நீங்கள் விசாரணை செய்த சம்பவம் ஏதாவது உண்டா?''

''பொல்காவலையில் சிங்கள ரயில் நிலைய அதிபர் ஒருவர் இருந்தார். இவருக்கு கேகாலையில் றப்பர் தோட்டம் உண்டு. நல்ல வசதிபடைத்தவர். விடுதியில் தங்குவதில்லை, வீட்டிற்குப் போய்விடுவார். இவர் தினமும் பணத்தைக் கொழும்புக்கு அனுப்பிவைப்பார். சிலசமயங்களில் பணம் குறைந்திருக்கும், 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்கள் காணமல் போய்விடும். அவரைக்கேட்டால் தான் சரியாகத்தான் அனுப்பினதாகச் சொல்வார். அனுப்பும் பண நோட்டுக்களின் நம்பர்களையும் அறிவிப்பார். ஆனால் நோட்டுகள் குறையும். கணக்காளர் ஒருவர் விசாரணை செய்யச் சென்று அவராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. கடைசியில் என்னை அனுப்பினர்கள். நான் போகுமுன் அதுபற்றிய விபரங்களை ஆராய்ந்தேன். ஒவ்வொரு வாரவிடுமுறையின் போதுதான் பணம் குறைந்து போகிறதென்பதை அறிந்தேன்.

மற்றும் இரு ஊழியரையும் அழைத்துக்கொண்டு ஒரு ஞாயிற்றுக்கிழமை போனேன். வாரவிடுறை வந்தால் சனி, ஞாயிறு பணத்தைக் கட்டி வைத்து திங்கள்தான் அனுப்புவார். வெள்ளி ஒரு விடுமுறை தினமாக இருந்தது. நான் போய் பார்த்தபோது வெள்ளி சனிநாட்களின் காசைத்தனித் தனியாகக் கட்டி 'சீல்' வைத்திருந்தார்.

கொழும்பில்தான் ஏதோ தவறு என்று அவர் வாதிட்டார். எனக்கு முன்னால் அந்த இரு பைகளையும் திறந்து பணத்தை எண்ணும்படி அவரிடம்கூறினேன். பைகளைத் திறந்ததும்சில நோட்டுக்களைக் காணவில்லை. நான் துருவித் துருவி விசாரணை செய்தேன். அங்குள்ள போட்டர்தான் பைகளில் காசைப் போட்டுக் கட்டுவதாகவும். தான் அருகில் இருந்து மேற்பார்வை செய்வதாகவும் ஒத்துக்கொண்டார். இரும்புப் பெட்டித் திறப்பு வைக்கும் இடமும் போட்டருக்குத்தெரியும். இவர் வீடு சென்றதும், போட்டரே பையைத் திறந்து நோட்டுகளை எடுத்துவிட்டு மீண்டும் பையைக் கட்டி சீல் வைத்ததும் விசாரணையில் தெரியவந்தது.

ரயில் நிலைய அதிபர் தன் கவலையீனத்தை ஒத்துக் கொண்டு சோர்வுப் பணமாக 5000 ரூபாவை அவரே செலுத்திவிட்டார். அத்துடன் அவர் இளைப்பாறியும் விட்டார். அவர்நிலையை நேரில் அறிந்தபடியால் அவருக்கு பாதகமான முறையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படி பல சம்பவங்கள் நடந்திருக்கிறது.

## சித்திரை மாத

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசுரித்தும், இளம் எழுத்தாளர் அதனை ஏற்பதும் வளர்ச்சிப்படிக்கு உதவுமென்றார். தினகரன் கதைகள் பற்றிப் பேசிய அ. இராமநாதன் பல நல்ல அம்சங்களை விளக்கினர். சினிமாக்கோலம் காதற்கதைகளில் இடம்பெறுவது நல்லதல்ல என்றார்.

தொகுப்புரை ஏ. ரி. பொன்னுத்துரையால் கூறப்பட்டது பொருளாதார வளமற்ற ஆனல் கற்பனை வளமும் சிருஷ்டி நுட்பமுமுள்ள எழுத்தாளன் நவீன தமிழ் ஓடடத்தை வளம் செய்ய நல்ல செய்திகளை மனித இதயத்தில் பாய்ச்சிட முயலுகின்றான் அவனது ஆக்கங்களைப் படிப்பது, நல்லவற்றைப் பற்றிப் பிரசாரம் செய்வது, அவனது உள்ளத்தில் நிறைவை உருவாக்கி மென் மேலும் முனைப்புடன் முன்னேற உதவுவது மக்களின் மகத்தான பணி. கிராமிய மட்டத்திலேயே சங்கம் சபைகளில் விமர்சன அரங்குகள் நடாத்தப்படவேண்டும். எழுத்தாளன் பணிபற்றிய ஒலி பெரிதாக ஒலிக்க வேண்டும், வாசகர் வட்டப் பெருகிட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். எமது கிராமத்தில் இலக்கிய ரசிகர்களில் பெண்கள் தொகை கூடிவருவதைப் பாராட்ட முடிகிறது. பேனு மன்னர்களின் பெருமை எமது சமூகத்துக்குப் பெரும் புகழ் ஈட்டும்; அதனை வலுப்படுத்த முனைவோம் என்றார் ஏ. ரி. பொன்னுத்துரை.

—அவதானி

# இப்படியும் நடக்கிறது

பாடசாலைக்கு அருகில் அவர் நின்றுகொண்டிருக்கிறார். அடிக்கடி கையில் கட்டியிருக்கும் கடிகாரத்தையும் பார்க்கிறார்.

அவர் முகம் சற்று மலர்கிறது. காரணம்: பாடசாலை விடும் நேரம் வந்துவிட்டது. மாணவர்களும் சிரித்த முகங்களுடன் வெளியே வருகின்றனர்.

சில மாணவர்களை அவர் அழைக்கிறார். இலவச மதிய உணவு பற்றி விரிவாக விசாரிக்கிறார். அவர் முகம் சுருங்குகிறது.

அடுத்த கட்டம் — அவர் பாடசாலை வளவுக்குள் பிரவேசித்து நேரே அதிபர் அறைக்குள் சென்று அங்கு வழங்கப்படும் மதிய உணவின் 'தரம்' பற்றிக் கூறி, ஆசிரியர்களுக்கும் அறிவுரை சொல்லி வெளியேறுகிறார்.

அவர் யார் தெரியுமா? அந்தப் பிரமுகர்தான், மன்னார் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம்.

மன்னாரில் சில இடங்களில் உள்ள பாடசாலைகளில் இப்போது பலரின் கண்கள் வீதியையே அடிக்கடி பார்க்கிறதாம்!

'ஊடுருவி''

# மோட்டார்சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்–வான் விபத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இருவரில் ஒருவர்நேற்று மரணமானர்.

இவ்விபத்தில் காயமடைந்த மீசாலையைச் சேர்ந்த விசுவலிங்கம் ஞானச்சந்திரன் வயது 22), கணேசன் பரமேஸ்வரன் (வயது 21) ஆகிய இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் வி. ஞானச்சந்திரன் என்பவரே நேற்று மரணமானர். மரண விசாரணை முடிவில் சடலம் தகப்பனாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

# சாரணர் கூலி வேலை வாரம் ஜூன் 17 முதல் 26 வரை

(வேலணை)

இலங்கை சாரணர் குழுக்களுக்கிடையிலான கூலி வேலை வாரம் இம்மாதம் 17ம் திகதி முதல் 26ம் திகதி வரை அகில இலங்கை ரீதியில் கொண்டாடப்படவிருக்கின்றது.

யாழ். மாவட்ட சாரணர்கள் இவ்வாரத்தின் போது அணியணியாக வீடுகளுக்குச் சென்று கூலிவேலைகளைச் செய்யும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள்.

வீட்டு வேலைகளைச்செய்தல், தோட்டம், வளவுகள் துப்புரவு செய்தல், வேலி அடைத்தல், சுவர்களுக்கு மைபூசுதல், கழுவுகல், புல்லுப்பிடுங்குதல் ஆகிய பணிகளில் இவர்கள் ஈடுபடுவர்.

மேற்படி வேலைகளைச் செய்து பெற்றுக் கொள்ளும் ஊதியத்தை தங்களது குழுக்களின் செலவுகளுக்கு பயன்படுத்துமாறும் இவர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு குழுக்களிலும் 6பேர் அங்கம் வகிப்பது அவசியமாகுமென யாழ். மாவட்ட சாரணர் குழு ஆணையாளர் திரு. செ. வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

# ஏழை மாணவருக்கு உணவு; ஏனையோருக்குப் பணம்

## கல்வித்திணைக்களம் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடசாலைகளில் 'மதிய உணவு' கட்டாயமாக வழங்கப்படவேண்டும். வசதியுள்ள பிள்ளைகள் வீட்டிலிருந்து தமக்குரிய உணவைக் கொண்டுவந்தால் அவர்களின் மதிய போசனத்திற்குரிய பணத்தை வழங்கலாம்.

இவ்வாறு யாழ். கல்வித் திணைகளம் ஆலோசித்துவருகிறது என்றும் இதுகுறித்து இன்னமும் எதுவித இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

இதேவேளையில் யாழ்ப்பாணத்திலுள்ள தொகையான மாணவர்கள் கல்வி யிலும் ஓரிரு பெரிய பாடசாலைகள் மதிய உணவு வழங்குவதற்குச் சிரமமாக இருப்பதாக யாழ். கல்வித்திணைக்களத்தினருக்கு முறையிட்டுள்ளன. எனினும் கல்வி அமைச்சு இதுகுறித்து எதுவித தீர்மானமும் எடுக்காததினால் அவர்களது கோரிக்கை பற்றி எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஏழை மாணவர்களுக்கு மதிய உணவுக்குரிய பணத்தை வழங்கினால் நிச்சயம் அப்பணத்திற்குச் சத்துள்ள உணவை அவர்கள் உண்பார்களா? என்பது அவர்களின் குடும்பச் சூழலைப் பொறுத்த வரை சந்தேகமாகவே இருக்கும். எனவே வறிய பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுதல் அவசியமே? என யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணப்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பிரதிக் கல்விப்பணிப் பாளர்களுக்குமான முக்கிய கூட்டமொன்று இன்று திருகோணமலையில் நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கதி தெரியுமா?

### ஆனை அதை உண்கிறதா?

ஆனை விளாம்பழத்தை அப்படியே விழுங்குகின்றது. அதிலே சிறிய துவாரம். ஆனையின் உடற்சூட்டினால் பழத்தின் உட்பகுதி உறிஞ்சப்படுகின்றது. கோது உடையாமலே இலத்தியோடு (மலத்தோடு) வெளிவருகின்றது.

இது உண்மையா? இலங்கையின் அளவையாளர் நாயகமாகக் கடமைபுரிந்த ஜி. டி. வுட்கவுஸ் என்பவர் வுட்அப்பிள் பற்றி அதாவது விளாம்பழம் பற்றி—ஆராய்ந்துள்ளார்.

விளாத்தியின் பூவிலேயே வண்ணத்துப் பூச்சிகளின் முட்டைகளும் குடம்பிகளும் ஒட்டிக்கொள்கின்றன. பூ காயாகிக் கனியாகும்போது, அவை வளர்ந்து பழத்தை உணவாகக் கொள்கின்றன. அவை ஊர்ந்து வெளியேவரத் துவாரம் அமைக்கின்றன. பழத்தைத் தாங்கும் நரம்பும் பாதிக்கப்படுகின்றன.

இதனால் பழமற்ற வெறும் கோதுகள் மரத்தின்கீழ் விழும்; காற்றாலும் மழையாலும் அவை உருண்டுசெல்லும்.

இப்படி உருண்டு கிடக்கும் கோதுகள்மீது யானை தற்செயலாக இலத்திகளைப் போட்டுவிடும். இதனைக்கண்டுவிட்ட மக்களின் கற்பனையில்—கட்டுக்கதையில் எழுந்த கருத்துத்தான் யானை விளாம்பழத்தை அப்படியே விழுங்கிக் கோதை உடைக்காமலே பழத்தை உண்கிறது என்பது.

எப்படியிருக்கிறது கற்பனை கலந்த அறிவுச் சோதிகளின் கட்டுக்கதை.

- வாணி

# அங்கவீனர்கள்பற்றி கணக்கெடுப்பு ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை முழுவதுமுள்ள அங்கவீனர்கள் தொடர்பான சனத்தொகை கணக்கெடுப்பு ஒன்றை சமூக சேவைகள் திணைக்களம் தற்போது மேற்கொண்டு வருகிறது.

இதற்குத் தேவையான பத்திரங்களை திணைக்களம் சகல கிராம சேவை அலுவலர்களுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது.

எதிர்வரும் பத்தாம்திகதிக்கு முன் இந்தப் பத்திரங்களை பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவேண்டுமென்று கிராம சேவை அலுவலர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

சகல அங்கவீனர்களும் அல்லது அவர்களது குடும்பத்தவர்கள் தத்தம் பகுதியிலுள்ள கிராமசேவை அலுவலருடன் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைக்கொடுக்குமாறு திணைக்களம் கேட்டிருக்கிறது.

இவ்விதமாக திரட்டப்படும் விபரங்கள் அனைத்து மாவட்ட ரீதியாக சேகரித்து வைக்கப்படும்.

இந்தக் கணக்கெடுப்பில் பிறப்பிலிருந்தே அங்கவீனமடைந்தவர்களின் விபரங்களுடன் விபத்தின் மூலம் அங்கவீனமடைந்தவர்களின் விபரங்களும் சேகரிக்கப்படும்.

## இராசி பலன்

05 06-1989

துவிதியை இரவு 9-17 வரை மிருக சீரிடம் காலை6-26வரை, திருவாதிரை பின் இரவு 5.39 வரை, அமிர்த சித்தயோகம். அவசியகருமங்கள் செய்யலாம். இராகுகாலம் 7-22 முதல் 8-56 வரை.

மேஷம்: எண்ணியவை தடைப்படும், பொருட் செலவு மனையாளுக்கு நோய், அதிகாரிகள் சினம்.

இடபம்: பணவரவு, புதிய உறவு. மனையில் சுபகாரியம், தொழில்முயற்சி, நண்பர்கள் உதவி.

மிதுனம்: ஏமாற்றம் எதிர்பாராத தொல்லை, குடும்பத்தில் குழப்பம். அயலவர்பகை, அலைச்சல்.

கடகம்: விவாகத்தடை, அறங்கூறுதல், தாயாருடன் வாக்குவாதம், பணமுடை, மனநிம்மதியின்மை.

சிங்கம்; எதிர்பாராத துன்பம், குடும்பப்பகை, தொழில் பிரச்னை, பயணம், காதல் தோல்வி.

கன்னி: தொழில் சிறப்பு, மனையில் மகிழ்ச்சி வெற்றி பெரியோர் பாராட்டு, விருந்துபசாரம்.

துலாம்: குடும்பத்தில்குறை கேட்டல், அலட்சியப்போக்கு வேலைப்பளு, தொழில்தானத்தில் போட்டி பெருமை.

விருச்சிகம்: ஏமாற்றம், நம்பிக்கைத்துரோகம், குடும்பத்தில் பிரிவு, சிறுபிணி மனச்சுமை

தனுசு; நோய் வாட்டும். தகராறு, மனஸ்தாபம், மக்களால்தொல்லை. அந்நியவாசம்.

மகரம்: காதல்உறவு, உல்லாசப்பயணம், அறிஞர் சந்திப்பு. வெற்றிக்களிப்பு, பாராட்டு.

கும்பம்: தாய்வழிநினைவு, ·யரச்செய்தி, பொருட்செலவு அதிகாரிகள்சினம்கவலைமிகுதி.

மீனம்: தூரத்துச் செய்தி புதிய ஸ்தானம், மனமகிழ்ச்சி, கணவரின் பாராட்டு, சுபநிகழ்ச்சி.

# "முறைசாராக் கல்வி வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கும்"
## வெளிக்கள உத்தியோகத்தர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"பெற்றோரும் முறைசாராக் கல்வியின் முக்கியத்துவத்தை உணரவேண்டும். அப்படி உணர்ந்தால்தான் தம் பிள்ளைகளைத் தொழிலின்றி வீட்டில் வைத்திருக்காது, இப்பயிற்சி நெறிகளைக் கற்பிப்பதற்கு அனுப்புவார்கள். பெற்றோர் பிள்ளைகளை வேலை உலகிற்கு உற்சாகப்படுத்தி, உடல் உழைப்பினால் உயரலம் என்ற நம்பிக்கையை ஊட்டி, அவர்களை வழிநடத்த முன்வரவேண்டும்" என்று கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர் திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் வேம்படி மகளிர் கல்லூரியில் முறைசாராக் கல்விப்பிரிவின் ஆரம்ப வைபவத்தில் பேசும்போது கூறினர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் ஹொட்டல் முகாமைத்துவம், ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி நெறிகளின் 89 ஆய்வுக்கான ஆரம்ப விழா கல்லூரி அதிபர் செல்வி இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் மேலும் பேசுகையில், "வெளிநாட்டு நாகரிகங்களைப் பின்பற்றும் இளைஞர்களும், யுவதிகளும், அவ் வெளிநாட்டவரின் மனப்பான்மைப் பின்பற்றத் தவறிவிடுகிறார்கள். இதனால் தொழில் மகத்துவம் தெரியாது தத்தளிக்கிறார்கள்" எனக் கூறினர்.

இவ்வைபவத்தில் தலைமையுவரயாற்றிய கல்லூரி அதிபர செல்வி ஆர். இராசரத்தினம் "எமது கல்லூரியைப் பொறுத்தளவில், சில பற்றுக் குறைகளுக்கு மத்தியிலும், நாம் முறைசாராக் கல்வியின் தேவையை நன்குணர்ந்து அக்கல்வி நெறிக்குக் கை கொடுத்து உதவுகின்றோம். முறைசாராக் கல்விப் பிரிவுக் கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியத்தின் அயராத உழைப்பைப் பாராட்டுகிறோம்" எனக் கூறினர்.

இவ்வைபவத்தில் கலந்துகொண்ட முறைசாராக் கல்வி வெளிக்கள உத்தியோகத்தர் திரு. வி. பாலகிருஷ்ணன் உரையாற்றும்போது, "முறைசாராக் கல்விக்குத் தொழில் வழிகாட்டல் பகுதி ஒன்று கல்வித் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பயிற்சி முடிந்தவர்கள் தமது எதிர்காலத் திட்டத்திற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்" எனக் கூறினர்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரின் உப அதிபர் திருமதி ஜி. பொன்னம்பலம் நன்றி கூறினர்.

## பரிசில் பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் நல்லியக்க சபையினால் சிறுவர் பாடசாலை மாணவர் முதல்ஆண்டு 6வரை நடத்தப்பட்ட சிவபுராணத்தை மனனஞ் செய்யும் போட்டியில் பின்வருவோர் பரிசில் பெற்றனர்.

சிறுவர் பாடசாலை— ப. கேதீஸ்வரன் - கோவளம், பா. சசிரேகா- கோவளம், வே. கைலாசபிள்ளை- வாரிவளவு, க. நடேசலிங்கம்- வாரிவளவு, சி. நாகேஸ்வரி- கோவளம்.

ஆண்டு 1- சு. விஜேதன்- யாழ்ற்றன், நா. சிவநயனி- யாழ்ற்றன், சி. சிவதாரணி- யாழ்ற்ன், ப. பவளமலர்- யாழ்ற்றன், செ. உஷா- பாலாவோடை.

ஆண்டு 2. ச. வைதேகி- கலாநிதி ஆ. தி, ச. கமலராணி- வியாவில், பா. குகநேசன்- பாலாவோடை, கு. கஜேந்திரன்- வியாவில், அ. கமலரூபி- சுந்தரமூர்த்தி.

ஆண்டு 3. சு. சுதாகரன்- யாழ்ற்றன், பா. யசோதரா- சுந்தரமூர்த்தி, வே. பிருந்தா— வ. தெ. அ. மி. த.க.— ப. அன்பரசன்- யாழ்ற்றன், ந. சண்முகராசா— வியாவில்.

ஆண்டு 4. வி. கௌரி— வ. தெ. அ. மி. த. க, இ. விஷ்ணுதேவி-இலசுடி, க.புனிதம் - வ. தெ. அ மி· த.க, தி. ஜசிகரன்- ஆயி.லி, தே. ஐங்கரன்— யாழ்றறன்.

ஆண்டு 5. தே. உமாதேவி- வலந்தலை தெ. அ. மி. த. க, வ. தியாகசொரூபி- சுந்தரமூர்த்தி, பே. உதயரூபினி- சுந்தரமூர்த்தி; க சந்தணப்பிரியன்— வ. தெ. அ. மி. த. க, ச. சித்திராங்கனி- வ. தெ, அ.மி. த.க.

ஆண்டு 6. த. பரஞ்சோதி- யாழ்ற்றன், க. கலாஜினி- யாழ்ற்றன், ந. திருமகள் – சுந்தரமூர்த்தி, ம. குணசுந்தரி- வியாவில், நி. பாக்கியலட்சுமி- சுந்தரமூர்த்தி.

## இறம்பைக்குளத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்ட பொருட்கள்யாவும் இறக்கப்பட்ட பின்னரே அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கொழும்பிலிருந்து லொறிகள் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு வரும்போதே இக்கடத்தல் நடந்துள்ளது.

## புத்தூரில்சம்பவம்

(அச்சுவேலி)

புத்தூர் பத்தாம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்தது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்து சிலமணிநேரம் தடைப்பட்டது. ஆனாலும் பிற்பகல் வாகனப் போக்குவரத்துவழமைக்குத்திரும்பியது

தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதை அடுத்து அந்தப்பகுதியிலும் ஓரளவு பதற்றம் நிலவியது.

## நாய்களினால் நோயாளர் கஷ்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் நோயாளர்கள் அங்கு திரியும் கட்டாக்காலி நாய்களினால் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

இந்த நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவை எடுத்துச்செல்வதுடன் நோயாளர்களின் படுக்கைகளில் கூட படுத்து அசிங்கப்படுத்துகின்றனவாம்.

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து கோட்டக்கல்வி அலுவலகங்களையும் சேர்ந்த கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும், விசேட கல்வி அதிகாரிகளுக்கும் எதிர்வரும் 9ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். கல்வித் திணைக்களத்தில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறும்.

மதிய போசன உணவு மற்றும் பிற விடயங்களும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படலாம் எனத் தெரியவருகிறது. கூட்டம் யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஏ. பெரியதம்பி தலைமையில்நடைபெறும்.

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையச் சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது மேற்படி நிலையத்தின் போஷகர் பங்குத்தந்தை மெர்ன்பேர்ட் அடிகளார் விழாவை ஆரம்பித்ததுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினர். விழாவில் உடுவில் பகுதி சிறுவர் பாடசாலை ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். சனசமூகநிலையத் தலைவர் திரு. வ. அல்பிரட் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. சி.கிறிஸ்டி கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். (கு)

0 0 0

தம்பிராய் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவர்களின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றபோது கலைமகள் இல்லம் முதலாமிடத்தையும், திருமகள் இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

இவ்வித்தியாலய அதிபர் திரு. ச. கதிர்காமு தலைமையில் நடைபெற்ற இப்போட்டியின்போது கிளிநொச்சி கல்வி அதிகாரி திரு. எஸ். தர்மரெத்தினம் முதன்மை விருந்தினராகவும், பூநகரி கொத்தணி அதிபர் திரு. வி. கே. பரஞ்சோதி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு [illegible] சில்களை வழங்கினர். பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. பாலசுப்பிரமணியமும் கலந்துகொண்டார். இவ்விழாவில் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உப-தலைவர் திரு. பொ. தங்க[illegible] ... [illegible] து. குகராசா ஆகியோர்உரையாற்றினர். (பூநகரி நி.)

## ஞாபகார்த்த விளையாட்டரங்கு

(வடமராட்சி)

ஞாபகார்த்த விளையாட்டரங்குஒன்று இமையாணனில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த அரங்கிற்கு அவ்வூர் மக்கள்காணியை அன்பளிப்புச் செய்தனர்.

இத்திறப்பு விழாவில் பல பிரமுகர்கள் உரையாற்றினர். இறுதியில் காட்சிப் போட்டியாக பாஷையூர் விளையாட்டுக்கழகத்திற்கும் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகத்திற்குமிடையே 'செற்றப்' கரபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

# கொள்ளையடித்தனராம் 6 இலங்கைத் தமிழ் இளைஞர் கைது
## சென்னையில் சம்பவம்

(சென்னை)

விருகம்பாக்கத்திலுள்ள காந்தி நகர்ப்பகுதியில் வசிக்கும் ஆறு இலங்கைத் தமிழ் இளைஞர்கள் செங்கல்பட்டு கிழக்கு பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களவாடப்பட்ட ஆறு மோட்டார் சைக்கிள்களைப் பொலிசார் இவர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களில் பிரயாணம் செய்யும் இந்த இளைஞர்கள் காலை வேளையில் வழிப்போக்குப் பெண்களிடமிருந்து தங்கச் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு மறைந்து விடுவதாக விசாரணையிலிருந்து தெரியவந்திருக்கிறது.

இவ்விதம் கொள்ளையடிக்கப்பட்ட பெறுமதிமிக்கபொருட்களை இவர்கள் மதுரை, சேலம் ஆகிய இடங்களில் விற்பனை செய்துவருவது வழக்கம்.

காரைக்குடியில் இவ்விதமான விற்பனையில் ஈடுபட்டிருந்தசமயம் விசேஷபொலிஸ் கோஷ்டி ஒன்று இவர்களைக் கைது செய்தனர்.

## கரன்சி நோட்டுடன் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக சுமார் 4,500 அமெரிக்க டாலர் கரன்சி நோட்டுகளை வைத்திருந்த இந்தியத் தமிழர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுங்கத் திணைக்களத்தினர் அபராதமாக நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு பணித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம்பெறஅமைச்சுக்கு வரவேண்டியதில்லை"

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்படும் உதவிப் பணம், வீடமைப்புக்கடன்களைப் பெற்றுக்கொள்ள அவரவர்களின் பகுதி கிராம சேவையாளர்களுடன் தொடர்புகொள்ளும்படி அமைச்சின் உயர் அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிவாரண உதவிகளையும், விபரங்களையும்பெற்றுக்கொள்வதற்காக பெருமளவில் மக்கள் அமைச்சுக்கு வருவதனைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கும் உதவிகள், கடன்களை கிராம சேவகர்கள், அரசாங்க அதிபர்கள் மட்டத்திலேயே பெற்றுவிடமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சினால்தற்போது வன்செயல்களில் பாதிக்கப்பட்ட மக்களில் 700 ரூபாவுக்கு குறைந்த மாத வருமானம் உடையவர்களுக்கு வீடமைப்பு மானியமாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இதில் 12 ஆயிரத்து 750 ரூபா வீடமைப்புக்கான பொருள்களாகவும் மிகுதி பணமாகவும் வழங்கப்படுகிறது.

மாத வருமானமாக 700 ரூபா முதல் 1500 ரூபா வரை பெறுபவர்கள் மானிய அடிப்படையில் 15,000 ரூபா வரை 6 வீத வட்டிக்கு கடன் பெற முடியும். 1,500 ரூபா முதல் 5000 ரூபா வரை மாத வருமானம்உடையவர்களுக்கு 50,000 ரூபா கடன் பெற முடியும். 5000 ரூபாவுக்கு மேல் வருமானம் உடையவர்களுக்கு 1 லட்சத்து 50,000 ரூபா வரை கடனுகப் பெறமுடியும்.

இவற்றை அவ்வப்பிரதேச கிராம சேவகர்கள் மூலமாகவும் உதவி அரசாங்க அதிபர்கள், அரசாங்க அதிபர்கள் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

## வருடாந்த உற்சவம்

(நெல்லியடி)

கரவெட்டி கிழக்கு தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகராலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 10 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இம் மாதம் 18ம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். உற்சவகாலங்களில் மாலை தோறும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பயிற்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பயிற்சித்தராதரப்பத்திரத்தின் மூலப்பிரதியுடனும் ஏனைய ஆவணங்களுடனும் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொண்டால் நியமனக்கடிதங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்ட இளைஞனின் சடலம் யாழ் டேவிட் வீதியைச்சேர்ந்த ரொபின்சன் தோமஸ் அன்ரனி என்பவருடையது என அடையாளம்காணப்பட்டது.

மரண விசாரணையின் பின் சடலம் இறந்தவரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறிப்பிட்ட சடலம் நாவாந்துறையைச் சேர்ந்த செல்வராசா ரேமன் (வயது 23) என்ற இளைஞருடைய என்றே மரண விசாரணை நடைபெற்று உற்ருர் உறவினர்களும் ஆஸ்பத்திரிக்கு வந்தனர். விசாரணை முடியும்வேளையில் இறந்தவர் என்று கருதப்பட்டவர் தமது வீட்டுக்குத் திரும்பியதை அடுத்தே உண்மை தெரியவந்தது. (கு)

# உப்பு உற்பத்தி தனியாருக்கு அனுமதி

## ஏற்றுமதி செய்பவர்கள் மட்டும் உப்பளம் அமைக்கலாம்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கில் உள்நாட்டில் உப்பை விளைவிக்க முன்வரும் தனியார்துறையினருக்கு அரசு அனுமதி அளிக்க முடிவு செய்துள்ளது. அரசின் ஜனசவிய திட்டத்துக்கு ஆதரவாக இவ்வாறு அனுமதியளிப்பதென கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளதாக கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. ஆரியரத்ன ஜயதிலகா தெரிவித்தார்.

இத்தீர்மானத்தின்படி வடக்கு, கிழக்கு, தெற்கு வடமேற்கு மாகாணங்களில் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் உப்பளங்கள் அமைப்பதற்கு உள்நாட்டு வெளிநாட்டு தனியார்துறைக்கு அனுமதியளிக்கப்படும் அதேவேளையில் உப்பு உற்பத்தி தொடர்பான புதிய செலவு குறைந்த தொழில்நுட்ப முறையொன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. புதிய முறையின்படி 3000 ஏக்கர் பரப்பில் விளைவிக்கப்படக்கூடிய உப்பினை 10 ஏக்கர் பரப்பில் ஆழ்கிணறு அமைத்து பெறமுடியும் அனுமதிக்கப்படும் உற்பத்தியாளர்கள் தமது உப்பு முழுவதையும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கும்.

கடந்த காலங்களில் கூட்டுத்தாபனம் உப்பை ஏற்றுமதி செய்தபோதிலும் உற்பத்திக் குறைவினால் ஏற்றுமதியை நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

புதிய திட்டத்திற்கு அமைவாக உப்பை அடிப்படையாகக் கொண்டு கோஸ்ரிக் சோடா, குளோரின், குளோரைட் முதலியவற்றை உற்பத்தி செய்யவும் தனியார் துறைக்கு அனுமதியளிக்கப்படவுள்ளது. இவற்றை உள்நாட்டு தேவைகளுக்கு அரசே கொள்வனவு செய்யும்.

## உற்சவம்

(சுன்னுகம்)

சுன்னுகம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இத்தேவாலயத்தின் பங்குத் தந்தை அருட் திரு. எம். எட்வேட் யோகராசா அடிகளார் உற்சவத்தை ஆரம்பித்து வைத்தார். கொடியேற்றத்தைத் தொடர்ந்து நவநாள் வழிபாடும் அருளுரையும் இடம்பெற்றது. இம் மாதம் 12ம் திகதி மாலை திவ்விய நற்கருணை வழிபாடும். பவனியும் இடம்பெறும். மறுநாள் காலை கூட்டுத் திருப்பலியுடன் திருச்சொருபபவனியும் நடைபெறவுள்ளது.

## முகாம் மூடப்பட்டது

(பளைத்தரிப்பு)

பெரியவிளான் சந்தியில் இயங்கி வந்த இந்திய அமைதி காக்கும் படையின் முகாம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மூடப்பட்டுள்ளது. முகாமாகச் செயற்பட்டுவந்த வீடுகள் வீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

## சிங்களக் காசோலைகள்

(சுன்னுகம்)

அண்மையில் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற தாதிகள் பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றிய தாதியர்களுக்கு சிங்களத்தில் எழுதப்பட்ட காசோலைகள் வழங்கப்பட்டன.

மருத்தரங்கில்ப ங்குபற்றியதற்காக வழங்கப்பட்ட அந்த 60 ரூபாவுக்கான சிங்கள காசோலையை மாற்றுவதில் தாதியர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினராம்.

# 33000 கஷ்டப் பிரதேச ஆசிரியருக்கு இம்மாதத்தில் இடமாற்றம்

(கொழும்பு)

கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் 3,300 ஆசிரியர்கள் இம்மாதம் தொடக்கம் தமது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர். இடமாற்றம் பெறத்தகுதியானவர்களின் பட்டியலை கல்விச்சேவைக் குழு தயாரித்துள்ளது என அக்குழுவின் செயலாளர் திரு. வி. டபிள்யூ பண்டார தெரிவித்தார்.

3-12-89 ல் நான்கு வருட சேவையைப் பூர்த்தி செய்து அதில் 3 வருட காலத்தில் கஷ்டப் பிரதேசங்களில்சேவை செய்துள்ள ஆசிரியர்களே இவ்வாறு இடமாற்றம் பெற வுள்ளனர். எதிர்வரும் [illegible] மாதம் 15-ம் திகதி தொடக்கம் இந்த இடமாற்றங்கள் அமுல் செய்யப்படும் என அவர் கூறினர்.

அதே நேரம்கல்விச்சேவைக் குழு தற்போது 1730 விளையாட்டுத்துறை ஆசிரியர்களுக்கும் 900 நடன, இசை ஆசிரியர்களுக்குமான நேர்முகப் [illegible] நடத்தி வரு[illegible] தெரிவித்தார்.

# கொமெய்னி . . . .

( ம் பக்கத் தொடர்ச்சி)

ஈரானில் இஸ்லாமியக் குடியரசை ஆன்மீகத் தலைவர் அயதொல்லா கொமெய்னி தோற்றுவித்தார். ஈரானில் கொமெய்னி என்ற நகரில் இவர் 1900-ஆம்ஆண்டில் பிறந்தார். பின்னர் 1979 ல் மன்னர் ஷாவின் "ஷா ரேஷா பால்வா ஆட்சியைக் கவிழ்த்த இஸ்லாமிய புரட்சிக்கு மூல காரணமாக இருந்தார்.

பின்னர் இவர் ஈரானின் ஆன்மீக மற்றும் அரசியல் தலைவராக இருந்துவந்ததார். இஸ்லாமிய பள்ளிகளில் கல்வி பயின்ற அயதொல்லா கொமெய்னி இஸ்லாமிய தத்துவம், சட்டம் நெறிகள் பற்றிப் பல புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

1963 ல் அரசு எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்ற போது மன்னர் ஷாவின் ஆட்சியைக் கண்டித்தமைக்காக ஒரு வருடம் சிறை வைக்கப்பட்டு 1964ல் நாடு கடத்தப்பட்டு, 14 ஆண்டுகள் அயல் நாடான ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் 'அன்ஞஜெ' என்னுமிடத்தில் தங்கியிருந்தார்.

1978 ல் ஈராக்கை விட்டு வெளியேற்றப்பட்டு பின்னர் பாரிஸில் கிராமப்புறப் பகுதி ஒன்றில் தங்கினர். அங்கிருந்தபடியே ஈரானில் மன்னர் ஷாவின் ஆட்சியைக் கவிழ்த்து இஸ்லாமியக் குடியரசை ஏற்படுத்தும் போராட்டத்தில் இறங்கினர்.

1979 ல் ஈரானில் மாபெரும் மக்கள் போராட்டம் ஏற்பட்டு மன்னர் ஷாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது அயத்தொல்லா கொமெய்னி இந்த ஆண்டு பெப்ரவரி பகுதியில் மீண்டும் ஈரான் திரும்பினர். அவருக்கு அங்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டதுடன் ஆன்மீகப் புரட்சித் தலைவர் பட்டமும் வழங்கப்பட்டது.

1979 டிசம்பரில் ஈரானில் மக்கள்கருத்துக்கணிப்பு நடாத்தப்பட்டு 'ஈரானில் இஸ்லாமிய குடியரசு' தோற்றுவிக்கப்பட்டது, புதிய குடியரசின் அரசியல் ஆன்மீக தலைவராக ஆயுட்காலம் முழுவதிற்கும் கொமெய்னி நியமிக்கப்பட்டார்.

இவரது தலைமையில் ஈரானின் தேசியக் கொள்கையும், சர்வதேசக் கொள்கையும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தின்படியே வகுக்கப்பட்டன. மன்னர் ஷா பின்பற்றிவந்த மேலைநாடுகள் ஆதரவுப் போக்கை இவர் மாற்றினர்.

ஈரானின் சிராம வளர்ச்சியிலும் பொருளாதாரத்திலும் இவர் முக்கிய கவனம் செலுத்தினர். இக்காலப் பகுதியில் ஈரான் பொருளாதார, கைத்தொழில்துறையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமடைந்தது.

1980 ல் வளைகுடாப் பகுதியில்தான் ஓர் முக்கிய நாடு என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் அயல் நாடான ஈராக்குடன் யுத்தத்தில்ஈரான் இறங்கியது. வளைகுடாவில் எட்டு வருடங்கள் நடைபெற்ற இந்த யுத்தம் 1988ல் சர்வதேச நாடுகளின் நெருக்கடியான முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. இக்காலப்பகுதியில் இந்த யுத்தத்தால் இறந்தவர்களின் தொகை நான்கு லட்சம் என புள்ளிவிபரமொன்று தெரிவிக்கிறது.

இதன்பின் அடிக்கடி சுகவீனமுற்ற அயத்தொல்லா பல சர்ச்சைகளின் மத்தியிலும் தனது அடுத்த வாரிசாக அயத்தொல்லா மொன்ரசேரியை 1987ல்தேர்ந்தெடுத்தார். இவரும் தலைமையில் எழுந்த சர்ச்சை ஒன்றைபடுத்து தமது வாரிசுப் பதவியைத் துறந்தார்.

அண்மையில் லண்டன்வாழ் பிரபல எழுத்தாளர் சால்மன் ருஷ்டி எழுதிய 'சாத்தானின் வேதங்கள்' என்ற நூல் முஸ்லிம்உலகில்பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனையடுத்து இந்த நூலைத் தடைசெய்யக் கோரி பல முஸ்லிம் நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இதன் உச்சக்கட்டமாக ஈரான் மதத்தலைவர் அயதொல்லா கொம்மேய்னி எழுத்தாளர் சல்மான் ருஷ்திக்கு மரண தண்டனை விதித்தார். இது ஓர் ஒரு பக்கச் சார்பு நடவடிக்கையாகுமென மேலைத் தேசிய நாடுகள பலவும் கண்டித்தன. எனிவும் அவர் இதுபற்றிக் கவனமெடுக்காமல் மரண தண்டனையை நிறைவேற்றுபவர்களுக்குப் பல லட்சம் அமெரிக்க டாலர் பரிசாக வழங்குவதாயும் அறிவித்தார். தற்போதும் சல்மான் ருஷ்தி லண்டனில் தலைமறைவாகவே வாழ்ந்துவருகிறர்.

இவ்வருட ஆரம்பத்திலிருந்தே அடிக்கடி நோய்வாய்ப்பட்ட அயத்தொல்லா கொம்மேய்னி கடந்த மாதம் 23-ம் திகதி இரைப்பையில்ஏற்பட்ட இரத்தக் கசிவிற்காகச் சத்திர சிகிச்சைக்குட் படுத்தப்பட்டார். இதன்பின் நன்கு உடல் நிலை தேறிவந்தபோதும் நேற்றுக் காலை இவர் காலமானர்.

## தாக்குதல்: ஆஸ்பத்திரியில் மூவர்

(வடமராட்சி)

வட்டக்கச்சியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றை அடுத்து கிளிநொச்சி வாசிகள் இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ். குருபரலிங்கம் (வயது 48) வி. விஜயராசசிங்கம் (வயது 31) ஆகிய இருவருமே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த எம். ஜெயசிங்கம் என்பவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## சுவாமி விவேகானந்தர் பிறந்ததின நிகழ்ச்சிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணசாரதா சேவாச்சிரமம சுவாமி விவேகானந்தரின் 125வது பிறந்த நாளை முன்னிட்டு பருத்தித்துறை கிழக்கில் உள்ள குடத்தனை கிராமத்தில் இம்மாதம் 7-ம் திகதி பல நிகழ்ச்சிகளை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

குடத்தனைகரையூர் ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் அன்றைய தினம் திரைநீக்கம் செய்து வைக்கப்படும். பாடசாலை அதிபர் திரு.தோ, செபமாலை திருவுருவப்படத்தைத் திரை நீக்கம் செய்துவைப்பார். சுவாமி சித்ருபானந்தா சிறப்புரை வழங்குவார்.

இப்பாடசாலை மாணவ, பாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்கள் இலவசமாக பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தல் வழங்கப்படும்.

## இடையூறு

(சுன்னுகம்)

அளவெட்டி உப அலுவலகத்தின்கீழ் இயங்கிவந்த இருப்பளை மடம் சந்தை அண்மைக்காலச் சம்பவங்களால் இயங்க முடியாதுள்ளது. இதனைத் தொடர்ந்து கூத்தம் சீமான் என்னுமிடத்தில் வீதியோரமாக சந்தைகூடி வருகிறது.

பிரதான வீதியோரமாக இச்சந்தை கூடுவதால் போக்குவரத்துச் செய்வோர் பலவித இடைஞ்சலுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹாட்லி கல்லூரி 150 ஆண்டுவிழா

# கொழும்பிலும் பருத்தித்துறையிலும் இன்று முத்திரை வெளியீடு!

(வடமராட்சி)

ஹாட்லிக் கல்லூரியின் 150வது ஆண்டு ஞாபகார்த்த தபால் தலை வெளியீடு இன்று ஒரே நேரத்தில் கொழும்பிலும் பருத்தித்துறையிலும் நடைபெறுகிறது. இதற்கென 20 ஆயிரம் தபால் தலைகள் பருத்தித்துறை தபால் அலுவலகத்திற்கு வந்துள்ளன.

இந்த 75 சதம் பெறுமதியான தபால் தலை வெளியீடு இன்று பகல் 12-00 மணியளவில் கொழும்பு தபாற் தந்தித் திணைக்களத்திலும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் நடைபெறுகிறது.

கொழும்பில் இவ்வைபவத்தின்போது யாழ். பல்கலைக் கழக உப வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா பழைய மாணவர் சார்பிலும், கல்லூரி அதிபர் திரு. பொ. பாலசிங்கம் கல்லூரியின் சார்பிலும் பங்கு பற்றுகின்றனர்.

ஹாட்லிக்கல்லூரியில் நடைபெறும் வைபவத்தில் உபஅதிபர் திரு. எஸ். பொன்னம்பலம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எஸ். இராஜேந்திரன், பழைய மாணவர் சங்கத்தலைவர் திரு. ஏ. உருத்திராவும் கலந்து கொள்கின்றனர்.

# ஹாட்லிக்கல்லூரி இன்றுமுதல் சொந்தக் கட்டிடத்தில்

(வடமராட்சி)

ஹாட்லிக் கல்லூரி இன்று முதல் தனது சொந்தக் கட்டடத்துக்கு இடம் மாறுகின்றது.

கடந்த சில வருடங்களாக இடம்பெற்ற கலவரங்களினால் சேதமாக்கப்பட்டு இடம் பெயர்ந்த மேற்படி கல்லூரி, இதுவரை காலமும் புற்றளை மகாவித்தியாலயத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது தெரிந்ததே.

# அமைதிப்படை வெளியேறக் கூடாது

ஈ, என். டி. எல். எவ். கருத்து

(வவுனியா நிருபர்)

''வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் அமைதியும் உரிமைகளும் கிடைக்கும் வரை இந்திய அமைதிப்படைவெளியேறக்கூடாது. அப்படி வெளியேற இலங்கை அரசு நிர்ப்பந்தித்தால் தமிழீழக்கோரிக்கையை இந்திய அரசு ஏற்று அதற்கு ஆதரவளிக்க வேண்டும். இதுதான் தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பானது. மாறாக வேறு எந்த சமாதானமும் தமிழ்மக்களைத் திருப்திப்படுத்தாது''.

இவ்வாறு ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (ஈ.என்.டி.எல்.எவ்.) பொதுச் செயலாளர் திரு. ஜி. ராஜன் தெரிவித்துள்ளார்.

# அரச ஊழியருக்கு மீண்டும் வேலை: சிவில்உரிமைகள் இயக்கம் வரவேற்பு

(கொழும்பு)

1980ம் ஆண்டு இடம்பெற்ற பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலையிழந்த அரசாங்க ஊழியர்களுக்குமீண்டும்வேலை வழங்குவதென அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவை சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் வரவேற்றிருக்கிறது.

மேற்படி இயக்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''1980ம் ஆண்டு இடம்பெற்ற பொதுவேலைநிறுத்தத்தில் சிவில் சுதந்திரத்தோடு இணைந்த முக்கிய பிரச்னைகள் சம்பந்தப்பட்டிருந்தன.

''அத்தகைய பிரச்னைகளில் அரசாங்கம் இனி கவனம் செலுத்தவேண்டுமென இயக்கம் வலியுறுத்துகிறது. அத்துடன் இப்படியான ஒரு நிலை ஏற்படாமலிருப்பதற்கான தேவையான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்'' என்றும்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# அதிகாலைவேளை பெண் சுடப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

பிராம்பத்தையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரு பெண் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோமலேஸ்வரி பத்மநாதன் (வயது 20) என்ற பெண்ணே சூட்டுக் காயத்திற்குள்ளானவராவர்.

நேற்று அதிகாலை தோட்டத்தில் இறைத்துக்கொண்டிருந்த தமது கணவனுக்கு இப்பெண்மணி தேநீர் கொண்டு செல்கையில் சுடப்பட்டதாகவும், மாதகலிலிருந்து யாழ்ப்பாணம்வந்த மினிபஸ்ஸில் பிரயாணிகள் இறக்கப்பட்டு அதே பஸ்ஸில் சூடுபட்ட பெண்மணி யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (கு)

## மல்லாகத்தில் ஒருவர் பலி

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் பிற்பகலில் மல்லாகத்தில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

மரணமடைந்தவர் மல்லாகத்தைச் சேர்ந்த செல்லையா நிர்மலன் (வயது 42) என்ற ஏழு குழந்தைகளின் தந்தையார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the Genenral Post Office Sr iLanka under number B/10036/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

# பிரதமரின் பாதுகாப்புப்பிரிவு அதிகாரி வாகனம்மீது தாக்குதல்

(கொழும்பு)

பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரியான சிரேஷ்ட பொலிஸ் அதிபர் சுலைமானின் வாகனம் தாக்குதலுக்குள்ளானது.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கடந்த வியாழக்கிழமை கண்டியிலுள்ள கோணகல என்ற இடத்தில் பிரஸ்தாப பொலிஸ் அதிபரின் வாகனம் வந்துகொண்டிருந்த போது சுமார் முப்பது பேரைக் கொண்ட மாணவர்கோஷ்டி ஒன்று வந்த வாகனத்தை கற்களாலும், தடிகளாலும் தாக்கினர். இவர்கள் மாணவர்கள் என்று கூறப்படுகிறது.

## இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கட்டுடைச்சந்தி, அரியாலை ஆகிய பகுதிகளில் நேற்று மாலை இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள்.

கட்டுடைச் சந்தியில் சுட்டுக் கொல்லப்பட்டவர் மானிப்பாயிலுள்ள பலசரக்குக்கடையொன்றின் உரிமையாளரான எஸ். கணபதிப்பிள்ளை (34 வயது)என்றும், அரியாலையில் சுடப்பட்டவர் எஸ். பொன்னம்பலம் (60 வயது) என்றும் அடையாளம்காணப்பட்டுள்ளது.

## கொமெய்னி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இவரது இரைப்பை பகுதியில் இரத்தக்கசிவு ஏற்பட்டதையடுத்து கடந்த 23ந் திகதி அறுவைச்சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். அதன்பின் அவர் உடல்நிலை நன்கு தேறி வந்த போதிலும் நேற்றுமுன்தினம் மாலை உடல்நிலைமோசமாகி நேற்றுக்காலை மரணமானாரென்று கூறப்பட்டுள்ளது. இவரது மரணத்திற்கு அஞ்சலி தெரிவித்து இலங்கையில் இன்று தேசியதுக்கதினம் அனுஷ்டிக்கப்படும். (மேலதிக முழுவிபரம் 7ம் பக்கத்தில்)

## சிங்கள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கு, மலையகப் பகுதிகளிலிருந்து தமிழ் இளைஞர்கள் தீவிரவாதநடவடிக்கைகள் தொடர்பாக கைதாகி பல வருடங்களாக பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதில் பலர் விடுதலை செய்யப்பட்டாலும் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் தற்போது இம் முகாமில் ஒரு பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தெற்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் இந்திய அமைதிப்படை விலகல் தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாசா விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்திய அமைதிப் படையினர் வெளியேறும்வரை தமது எதிர்ப்பு இயக்கத்தைத் தொடரப்போவதாகவும் ஜே. வி. பி.யினர் தெரிவித்துள்ளனராம்.

## அமைதிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உள்நாட்டுப் பிரச்னைகள் உள்ளூர்மட்டத்திலேயே தீர்க்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டையே ஸ்ரீ ல. சு. கட்சி எப்போதும் எடுத்துவந்துள்ளது.

அமைதிப்படை இங்கே கொண்டுவரப்பட்ட போது கட்சி அதை வன்மையாக எதிர்த்தது. அந்த நிலையையே கட்சி தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது.

திரு. பிரேமதாஸா ஜனாதிபதியாகப் பதவியேற்று ஆறு மாதங்கள் சென்றபிறகே அமைதிப்படையை வெளியேறுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பினும், இந்தக் கட்டத்திலேனும் இவ்வாறான கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதை ஸ்ரீ ல. சு கட்சி வரவேற்றுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கேகாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கேகாலை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மாத்திரம் 164 பேர் பலியானதாகவும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளதாகவும் உதவிப் பணிகளில் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களில இவ்வெள்ளப் பெருக்கால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பாதிப்பு கடந்த சில தினங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் சரிவினாலுமே ஏற்பட்டுள்ளது.

பலர் வெள்ளப் பெருக்கிலும் மண்சரிவிலும் சிக்குண்டுள்ளதாகவும், இவர்களைக் காப்பாற்றும் பணியில் இராணுவத்தினர் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

1947ம் ஆண்டிற்குப்பின்னர் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளப்பெருக்கு இதுவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது துரித நிவாரணப் பணிகளும் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஈழநாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### திரு. வீ. டபிள்யூ பண்டார 'ஈழநாடு'க்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார்.

கல்விச் சேவை ஆணைக்குழுவினால் 1984 ம் ஆண்டு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் ஆசிரியைகள் நான்கு வருட காலம், நியமிக்கப்பட்ட இடங்களில் சேவையாற்றினால் பின்னர் சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று கூறப்பட்டது.

இதனடிப்படையில் இவ்வருடம் ஜனவரி மாதம் 9ம், 10ம் திகதிகளில் இவர்களின் இடமாற்றத்துக்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டிருந்தன. எனினும் இவர்களுக்கான இடமாற்றங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

தமது இடமாற்றங்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக கொழும்பு 'இசுறு பாயா' வில் அமைந்திருக்கும் கல்விச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு முன்னால் குழுமியிருந்த பட்டதாரி ஆசிரியர்கள் இடமாற்றங்களுக்காக தினமும் இங்கு வந்து அவதிப்படுவதாக 'ஈழநாடு'விடம் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கல்விச் சேவை ஆணைக்குழுச் செயலாளரிடம் 'ஈழநாடு' விசாரித்த போது; ''இடமாற்றங்கள் தொடர்பாகக் காலதாமதம் ஏற்படுவது பற்றி நாம் தனித்தனியாகத் தபால் மூலம் அறிவித்திருந்தோம். சுமார் 700 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடத்தி 500 பட்டதாரி ஆசிரியர்களை இடமாற்றங்களுக்கு உட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவர்களின் பெயர்ப் பட்டியல் தமிழ், சிங்கள, முஸ்லிம் அடிப்படையில் தனித்தனியாகத் தயாரிக்கப்பட்டுவருகின்றன. தமிழ்த்தட்டெழுத்தாளர்கள் தட்டுப்பாடு காரணமாகவே காலதாமதம் ஆகியுள்ளது. மொத்தம் 500 தமிழ்ப் பட்டதாரிகளில் 260 ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்திற்கு அவர்கள் கோரியபடி இடமாற்றம் செய்யப்படுவார்கள். ஏனையோர் ஏனைய தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கு மாற்றஞ் செய்யப்படுவார்கள். இன்னும் ஒரு வாரத்திற்குள் பட்டியல் தயாராகியதும் இடமாற்றம் பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படும்'' என்று தெரிவித்தார்.

# நடைபாதை வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர நடைபாதை வியாபாரம் இன்று திங்கட்கிழமை முதல் யாழ். நகரத்தின் பழைய சந்தை அமைந்துள்ள இடத்திற்குமாறுகிறது.

யாழ். பஸ்நிலையச் சுற்றுடலைச் சேர்ந்த கஸ்தூரியார்வீதி, நவீன சந்தையின் வெளிப்புறங்கள் ஆகிய இடங்களில் வியாபாரத்தை மேற்கொண்டிருக்கும் நூற்றுப் பதினைந்து நடைபாதை வியாபாரிகளும் புதியஇடத்தில் தமது வியாபாரத்தை செய்வதற்கு பூரணமான விருப்பம் கொண்டுள்ளதாக நடைபாதை வியாபாரிகள் சங்கத்தலைவர் ஜனப் எஸ். ஏச். சல்மானும், செயலாளர் திரு. கே. எஸ். சந்திரனும் தெரிவித்தனர்.

புதிய இடத்தில் ஒரு வியாபாரிக்கு ஐந்தடி நீளம், ஐந்தடி அகலம் கொண்ட இடப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி வியாபாரிகள் கடந்த வெள்ளி பிற்பகல் தமக்குரிய இடத்தை அடையாளம் கண்டுள்ளனர்.

## ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி

கப்படுவதை ஒப்புக்கொள்ளவில்லை என்று ஜனாதிபதி கவலை தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்படவேண்டும் என்பது தொடர்பாக ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை அடுத்தே இச்சந்திப்பு இடம்பெற்றது.

## சீன நிலைமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களரி நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுவரை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் சிக்கி நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பீக்கிங் நகர்ப்பகுதியில் 'தியனென்மென்' சதுக்கத்திற்கு அருகிலேயே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், இராணுவத்தினரின் தாக்குதலுக்கிலக்காகி சிறுவர்கள், பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவம் பலாத்காரத்தை பிரயோகித்து ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த முயன்றபோதே இந்த கைகலப்பு ஏற்பட்டது. இதன் போது ஆர்ப்பாட்டக்காரர்களும் இராணுவத்தின் மீது பெற்றோல் குண்டுகளை வீசி தாக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. சீனாவில் இடம் பெறும் இச்சம்பவத்தை உலகின் பல நாடுகளும் கண்டித்துள்ளன.

(மேலதிக செய்தி 3ம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org